
ஜூலை 2024

# தீபகச் சுடர்

தீபம் 13 சுடர் 02

திபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



என்
ஆண்டவரே!
என் கடவுளே!!

# தீபகத்திலிருந்து **இறையாசீர்**



திருத்தந்தை பிரான்சிஸ் புனித தோமையாரை நமது இரட்டை சகோதரர் என்று அழைக்கின்றார். இரட்டை பிறவி சகோதரர்கள் / சகோதரிகளின் குண நலன்கள், பழக்க வழக்கங்கள் ஒத்திருக்கும். நமக்கும் புனித தோமாவுக்கும் இரட்டையர்கள் போல பல ஒற்றுமைகள் இருக்கின்றன.

புனித தோமா "சந்தேக தோமா" என்று அழைக்கப்படுகின்றனர். ஆனால் அவரை "புனித தோமா" என்றே அழைக்கின்றோம். சந்தேகத்தின் திருஅவையின் வரலாற்றில் ஒரு முக்கியமனான இடத்தைப் பிடித்தவர். தோமா மட்டும் சந்தேகப்படவில்லை மற்ற திருத்தூதர்கள் அனைவரும் சந்தேகப்பட்டவர்கள்தான். புனித மாற்கு திருத்தூதர்களின் நம்பிக்கையில்லாத் தன்மையும், கடின உள்ளத்தையும் இயேசு கடிந்து கொள்கிறார் என பதிலிடுகின்றனர் (மாற்கு 16:14) புனித தோமாவின் "சந்தேகம்" நம்பிக்கை இன்மை நமக்கு ஒரு சில பாடங்களை கற்றுத் தருகிறது.

முதலாவதாக, இயேசு தமது இறுதி உணவின்போது தமது பாடுகளைப்பற்றியும் இறப்பைப்பற்றியும் குறிப்பிடும் போது "நான் போகும் இடத்திற்கு உங்களுக்கு வழி தெரியும் என்று கூறும்போது தோமா, ஆண்டவரே நீர் எங்கு செபித்தீர் என்றே தெரியாதபோது எப்படி எங்களுக்கு வழித்தெரியும் என்று துணிவுடன் கேள்வி கேட்டார். நாம் கேள்விக் கேட்க துணியவேண்டும். இறைவனிடம் நாம் கேள்வி கேட்கலாம் சரியான புரிதல்பெறலாம். ஆயிரம் கேள்விகள் ஒரு சந்தேகத்தை ஈடுசெய்ய முடியாது.

இரண்டாவதாக, புனித தோமா நம்பிக்கை கொள்வதால் நடக்கவிருக்கும் விளைவுகளைப்பற்றி நமக்கு கற்பிக்கின்றார். அதாவது நம்பிக்கை என்பது வாழ்வதற்கானது, செயலுக்கானது, தோமா நம்பிக்கை கொள்வதால் நாம் வாழும் நம்பிக்கை, செயல்பாடுகள் நம்மை ஒரு சாட்சியாக வாழ வழிவகுக்கும். ஒரு மறைசாட்சியாக மதிப்பதாலும் நம்மை இட்டுச்செல்லும். இலாசர் இறப்பிற்கு இயெசு பெத்தானியாவிற்கு செல்ல திட்டமிட்டபோது சிலர் அவரை அங்கு செல்லவிடாமல் தடுத்தார்கள் அவர் அங்கு சென்றால் அவர் சாவதற்கு உள்ளாவார் என்று இயேசுவை தடுத்தனர், எச்சரித்தனர். ஆனால் தோமா "நாமும் அவரோடு செல்வோம், மரிப்போம்" என்று அவரது விசுவாசத்தை செயல்படுத்தியதற்கான ஒன்றாக நமக்கு வெளிப்படுத்தினார். இயேசுவுக்காக தாம் இறக்கவும் தயார் என்று நம்பிக்கையை அறிக்கையிடுகின்றார்.

இறுதியாக புனித தோமா உயிர்த்த ஆண்டவரை அவரின் காயங்களால் ஏற்பட்ட தழும்புகளில் தன் விரலையிட்டு விசுவசித்தவர். அதனால் அவர் "என் ஆண்டவரே என் கடவுளே" என்ற விசுவாச அறிக்கையை உலகிற்கு அறிவித்தார். என் ஆண்டவரே என் கடவுளே என்ற விசுவாச அறிக்கை "கடவுள்" எனக்கு சொந்தமானவர் என்றும், நான் கடவுளுக்கு மட்டும் சொந்தமானவன் என்றும் இதன் வழியாக நாம் விசுவசிக்கின்றோம். "கடவுள் நம்மோடு" கடவுள் நம்மிடையே வந்தார், கடவுள் எனக்காக பிறந்தார், கடவுள் எனக்காக வாழ்ந்தார், கடவுள் எனக்காக பாடுபட்டார், கடவுள் எனக்காக இறந்தார், எனக்காக உயிர்த்தார் இதுவே நம் நம்பிக்கை.

புனித தோமாவின் விழாவில் நாமும் இயேசுவோடு செல்லவும், இறக்கவும், அவரின் காயங்களால் நாம் குணமடையவும், சாட்சி சொல்லவும், இயேசுவை அறிவிக்கவும், அவரின் உதவியை நாடி செபிப்போம்.

**அனைவருக்கும் புனித தோமாவின் விழா வாழ்த்துக்களையும்**
**செபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

என்றும் அன்புடன்
அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச
இயக்குநர் - தீபகம்

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


03.07.2024 புனித தோமா இந்தியாவின் திருத்தூதர் பெருவிழா - திருப்பலி 02

05.07.2024 புனித அந்தோனி மரிய சக்கரியா - திருப்பலி 03

07.07.2024 பொதுக்காலம் 14ம் ஞாயிறு - திருப்பலி 05

14.07.2024 பொதுக்காலம் 15ம் ஞாயிறு - திருப்பலி 06

16.07.2024 கார்மேல் மலை புனித கன்னி மரியா - திருப்பலி 08

21.07.2024 பொதுக்காலம் 16ம் ஞாயிறு - திருப்பலி 09

22.07.2024 புனித மகதலா மரியா விழா - திருப்பலி 11

24.07.2024 புனித ஷார்பல் மாக்லுப் - திருப்பலி 12

25.07.2024 புனித யாக்கோபு திருத்தூதர் விழா - திருப்பலி 14

26.07.2024 புனித கன்னிமரியாவின் பெற்றோர் திருவிழா - திருப்பலி 15

28.07.2024 பொதுக்காலம் 17ம் ஞாயிறு - திருப்பலி 16

29.07.2024 புனித மார்த்தா நினைவு - திருப்பலி 17

31.07.2024 லொயோலா நகர்ப் புனித இஞ்ஞாசியார் - திருப்பலி 18


## பகுதி 2: நம்பிக்கையில் வளர...


சந்தேகத் தோமாவா? சாதனைப் படைத்த தோமாவா? 20

அருளாளர் மரிய ரொமேரோ மெனேசஸ் வாழ்வு தரும் பாடம் 22

மரியாவின் பெற்றோரை அறிவோம் 24

திருஅவைச் செய்திகள் 27

## பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

## 03.07.2024 புனித தோமா திருத்தூதர் பெருவிழா திருப்பலி

**முன்னுரை**

திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

இன்று திருஅவையானது திருத்தூதர் புனித தோமா இந்தியாவிற்கு வந்து நற்செய்தி அறிவித்து பல மக்களை கிறிஸ்தவர்களாக மாற்றினார். இவர் கி.பி. முதலாம் நூற்றாண்டில் கலிலேயாவில் பிறந்தவராகத் தெரிகிறது. இவர் திருத்தூதர் பிலிப்பு வழியாக இயேசுவுக்கு அறிமுகமாகியப் பின்பு திருத்தூதரானார். உயிர்த்த இயேசு சீடர்களுக்கு காட்சி கொடுத்தபோது தோமா அங்கு இல்லாததால் உயிர்த்த இயேசுவைத் தன் கண்களால் காணமுடியாமல் போயிற்று. எனவேதான் தோமா "ஆண்டவரைக் கண்டோம்" என்று சீடர்கள் சொன்னபோது, "அவருடைய கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட தழும்பைப் பார்த்து, அவர் விலாவில் என் கையை இட்டாலன்றி நான் நம்பமாட்டேன்" என்றார். உயிர்த்த இயேசு இவருக்குத் தோன்றி, தோமாவிடம் "இதோ என் கைகள், இங்கே உன் விரலை இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கைக் கொள்" என்றார். தோமா, இயேசுவைப் பார்த்து, "நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்" என்றார் (யோவான் 20: 27-28). தோமா நற்செய்திப் பணி செய்ய இந்தியாவிற்கு வந்தார். கேரள மாநிலத்திலும், தமிழகத்திலும் நற்செய்திப் பணி செய்து நிறைய மக்களை கிறிஸ்தவ மதத்தைத் தழுவச் செய்தார்.

மயிலாப்பூர் பகுதியின் அரசன் மாஸ்டாய் என்பவரின் மனைவி மற்றும் மகள் கிறிஸ்தவ மதம் தழுவினர். இதனால் கோபம் கொண்ட மன்னன் தோமாவைக் கொலை செய்ய ஆணையிட்டான். இதற்கு காளிகோயில் பூசாரிகள் மன்னனுக்கு உதவி செய்தனர். தோமாவை காளிகோயில் பூசாரி "சின்னமலை" என்னும் இடத்தில் பிடித்தான். அங்கு அவனிடமிருந்து தப்பிய தோமா "பெரிய மலையில் முழங்கால்படியிட்டு தாம் செதுக்கிய சிலுவையின்முன் செபித்துக்கொண்டிருந்தபோது காளிகோயில் பூசாரி இவரை ஈட்டியால் குத்திக் கொலை செய்தான். பின்பு தோமாவின் சீடர்கள் இவரது உடலையெடுத்து அவர் கட்டிய சாந்தோம் தேவாலயத்தில் அடக்கம் செய்தனர். இவர் கட்டிடம் கட்டுவோர், கண்பார்வையற்றோரின் பாதுகாவலர். நாம் நம்முடைய வாழ்வில் தைரியசாலிகளாய் பிறர்மீதுள்ள சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டு இயேசு கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாச நெறியில் மென்மேலும் வளரத் தேவையான வரங்களை புனித தோமாவிடம் பெற்று வாழ வரமருள வேண்டி பக்தியோடு இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அருள்வரங்களின் ஊற்றே எம் இறைவா, புனித தோமாவின் வழித்தோன்றல்களான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் மற்றும் திருநிலையினர் அனைவரும் உமது நற்செய்திப்

பணியினை ஆர்வத்தோடும், நம்பிக்கையோடும் எடுத்துரைத்து மக்களை உம்வழியில் நடத்தத் தேவையான அனைத்து அருள்வரங்களையும் நிறைவாகப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. "நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்" என்று தன் நம்பிக்கையை அறிக்கை செய்த புனித தோமாவைப்போல் எங்கள் துன்பங்களில், தோல்விகளில், நெருக்கடி நேரங்களில், நம்பிக்கை இழந்துவிடாமல் இறை நம்பிக்கையை நாங்களும் அறிக்கை செய்து அதன்படி வாழ்ந்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. நீதியின் இறைவா, கட்டிடப்பணிகளின் பாதுகாவரலான புனித தோமாவை நினைவில் கொண்டு கட்டிடப்பணி செய்யும் தொழிலாளர்கள் அனைவரையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் பணிசெய்யும் தொழிலாளர்களை நீரே பாதுகாத்து உடனிருந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. "அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்" என்று மொழிந்தவரே, நாடுகளுக்கிடையே நிலவி வருகின்ற போர், சண்டை, சச்சரவுகள் நீங்கிடவும், எம் திருநாட்டிற்கு எதிராக எழும் தீவிரவாத சக்திகளை நீர் தடுத்து அமைதியோடு வாழ வரமருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 05.07.2024 புனித அந்தோனி மரிய சக்கரியா திருப்பலி

**முன்னுரை** திரு. சாம்சன்

புனித அந்தோனி மரிய சக்கரியா கி.பி.1502ம் ஆண்டில் லாசரோ, அன்டோவிட்டா தம்பதியினருக்கு கிரெமோனாவில் ஒரு இத்தாலிய பிரபுக் குடும்பத்தில் பிறந்தார். அந்தோனி பிறந்த சிறிது நேரத்திலேயே அவரது தந்தை லாசர் இறந்தார். மேலும் அவரது தாயார் அன்டோவிட்டாவுக்கு 18வயதுதான் என்றாலும் தனது மகனை நல்ல முறையில் வளர்க்க விரும்பி திருமணமே செய்துக்கொள்ளவில்லை. தாயைப்போன்றே அந்தோனியும் பக்தியுடனும், பெருந்தன்மையுடனும் வளர்ந்தார். லத்தீன், கிரேக்கம், தத்துவயியல் படித்தார். பதுவா சென்று தனது 22வது வயதில் மருத்துவப் பட்டம் பெற்றார். மதச்சார்பற்ற தொழில் செய்தாலும் செல்வம் சேர்ப்பதை நோக்கமாகக் கொள்ளாமல் நோயாளிகளின் உடல்நிலையைக் கவனிப்பதோடு மட்டுமல்லாமல் நோயாளிகள் மனந்திரும்புதல் போன்ற தொண்டு பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். பக்தியுடன் பங்கு ஆன்மீகப் பணிகளில் ஈடுபட்டார். தனது 26வது வயதில் குருவாக நியமிக்கப்பட்டார். தனது முதல் திருப்பலியின் நற்கருணை எழுந்தேற்றத்தின்போது மிகவும் பிரகாசமான ஒளியும் ஏராளமான வான தூதர்களும் சூழ்ந்து நிற்பதைக் கண்டார். இதைப்பார்த்த பலரும் அவரது இறப்பிற்குப் பிறகு சாட்சிப் பகர்ந்தனர்.

15 மற்றும் 16ம் நூற்றாண்டுகளில் வீழ்ச்சியடைந்த தேவாலய பணித்தலங்கள், மதகுருமார்கள் பலவீனமானவர்களாக இருந்தனர். இந்நேரத்தில் புனித அந்தோனி மரிய சக்கரியா நற்செய்தியின் உண்மையான தகவல்களை தெளிவாகவும் தொண்டு ரீதியாகவும் அறிவிப்பதில் தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார். இரண்டு ஆண்டுகளில் எல்லாவற்றையும் மாற்றினார். கி.பி. 1530ல் மிலனுக்குச் சென்று ஒரு குருவாக சமுதாயத்தை உருவாக்க முடிவு செய்து புனித பவுல் சபையை உருவாக்கினார். அப்போஸ்தலரின் வாழ்க்கை மற்றும் எழுத்துகளால் ஈர்க்கப்பட்டார். பெண்களுக்கான மத ஒழுங்கை நிறுவினார். புனித பவுலின் ஏஞ்சலின் சகோதரிகள் சபையை உருவாக்கினார்.

கி.பி. 1539ம் ஆண்டு கடுமையாக நோய்வாய்ப்பட்டு தனது தாயின் வீட்டிற்கு வந்தார். இங்கு ஜூலை 5ம் நாள் இறந்தார். கி.பி. 1849ல் திருத்தந்தை 9ம் பயஸ் அவர்களால் முத்திபேரடைந்தார். 1897ல் திருத்தந்தை 13ம் லியோ அவர்களால் புனிதராக அறிவிக்கப்பட்டார். இவர் திருஅவையில் உண்மையான மனிதர் மனசாட்சிபடி நடப்பவர். அடுத்தவர்களை நல்ல நிலைக்கு மாற்றக்கூடிய உண்மையான துறவி. அத்தகைய குணம் படைத்த புனித அந்தோனி மரிய சக்கரியாவின் விழாவைக் கொண்டாடுவதில் நாம் மகிழ்ச்சியடைவோம். அவரின் வாழ்வை முன்மாதிரியாக கொண்டு நாமும் வாழ இத்திருப்பலி வழியாக செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பு தந்தையே இறைவா, எங்கள் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் திருப்பலியை நிறைவேற்றும் அருட்தந்தையர்கள் அனைவரையும் ஆசீர்வதித்து அவர்கள் தங்களது பணியை திறம்பட செய்யக்கூடிய ஞானத்தையும், அருளையும், நல்ல உடல்நலத்தையும் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள் என்று மொழிந்த எம் இறைவா, எம் பங்கிலுள்ள அனைத்து சிறு பிள்ளைகளையும் உமது கரத்தில் ஒப்படைக்கின்றோம். அவர்கள் கல்வி, ஒழுக்கம், ஞானம், அறிவு கீழ்ப்படிதல் என்னும் பண்புகளைப் பெற்று விளங்க அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. உலக இரட்சரே எம் இறைவா, உலகில் உள்ள அனைத்து மக்களையும் ஆசீர்வதியும். குடும்பத்தலைவர்கள், நாட்டுத்தலைவர்கள், தங்களது கடமைகள், பணிகள் ஆகியவற்றில் தெளிவுப்பெற்று பொறுப்புடன் செயல்பட வேண்டிய அருளைப்பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 07.07.2024 பொதுக்காலம் 14ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜான் அலெக்ஸ்

I.1எசே. 2: 2-5 II. 2கொரி. 12: 7-10 மாற்கு 6: 1-6

இன்று பொதுக்காலம் ஆண்டின் 14ம் ஞாயிறு மற்றும் அருளாளர் மரிய ரொமேரோ அவர்களின் விழாவைக் கொண்டாடுகிறோம். இருப்பவர்களிடமிருந்து பெற்று, இல்லாதவர்களுக்கு கொடுத்து உதவும் ஒரு வழியினை மிக வெற்றிகரமாக கடைபிடித்தவர்களில் இன்று நாம் நினைவு கூறும் அருளாளர் மரிய ரொமேரோ என்ற சலேசிய அருட்சகோதரியும் ஒருவர். வசதி மிகுந்த குடும்பத்தில் பிறந்தவர் என்றாலும், ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்தில் சிறுவயது முதலே பெரிதும் அக்கரை கொண்டவர். தனது 12 வயதில் சலேசிய கன்னியர் நடத்தும் பள்ளியில் கல்வி கற்றார். தனது ஆன்ம தாகம், சலேசிய உள்ளுணர்வு மற்றும் தனிவரத்தின் மூலம் ஈடேறும் என்று நம்பினார். 1921ல் சலேசிய சகோதரிகள் சபையில் சேர்ந்தார். நித்திய வார்த்தைப் பாட்டிற்குறபின், 1931ல் ரொமேரோ கோஸ்டா ரிக்கோ நாட்டுக்கு பணிசெய்ய அனுப்பப்பட்டார்.

ஏழை எளிய ஆதரவற்ற சிறார்களுக்கு பணி செய்ய வேண்டும் என்பதே இவரின் இலட்சியமாக கொண்டிருந்த ரொமேரோவுக்கு ஏறக்குறைய 40 ஆண்டுகள் தரப்பட்ட பணி என்னவென்றால், தான் பணியாற்ற சென்ற பள்ளி முழுக்க முழுக்க பணக்கார பிள்ளைகளுக்கான கல்விக்கூடம். தொடக்கத்தில் கொஞ்சம் தளர்ந்தாலும், ஏழை எளியவர்களுக்கு பணி செய்யும் எண்ணம் கொண்ட ரொமேரோவை கடவுள் விட்டுவிடுவாரா என்ன? அவருக்கு ஒரு வழிகாட்டினார். கோஸ்டா ரிக்க முழுவதும் ஏழை எளிய மக்கள் அதிகம் காணப்பட்டனர். தன்னிடம் பயிலும் வசதியுள்ள பணக்கார பிள்ளைகளிடம் இத்தகைய மக்களைப்பற்றி சொல்வதை வழக்கமாக்கினார். அது நாளடைவில் பிள்ளைகளின் வழியாக பெற்றோருக்கும் இந்த எண்ணம் சென்று சேரவே, ரொமேரோவின் இலட்சியம் மெல்ல மெல்ல வளர ஆரம்பித்தது.

இவர்களின் உதவியால் பல இடங்களில் விளையாட்டு, மகிழ்ச்சிக்கான மன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதுமட்டுமல்ல 1961ல் ஏழை ஆதரவற்ற சிறார்களுக்கான ஒரு பள்ளிக்கூடம், 1966ல் இலவச மருத்துவமனை, 1972ல் வீதியில் தங்கி வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கும் எண்ணற்ற ஏழை எளிய மக்களுக்கு தங்குதவற்கான வீடு கட்டும் திட்டத்தையும் முதன்முதலில் நிகழ்த்தி காட்டினார் மரிய ரொமேரோ. அரசாங்கம் செய்ய வேண்டியதை அப்படியே இவர் தனியொருவராக, ஒத்த கருத்துடைய நல்லுள்ளங்களின் உதவியோடு செய்து வந்தார். இறை நம்பிக்கை, திறமை, ஆர்வம் மற்றும் உண்மையான அர்ப்பணம் கொண்ட மரிய ரொமேரோ, 1977ல் ஜூலை 7ம் நாள் மறைந்தார். 2002ல்

திருஅவையினால் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்ட மரிய ரொமேரோ மத்திய அமெரிக்காவின் முதல் அருளாளர் என்பது குறிப்பிடத்தக்கது. இயேசு தம் மலைப்பொழிவில் கூறும் பண்புகள் அனைத்தையும் தொன் போஸ்கோ தம் வாழ்வில் ஏற்று அவற்றை சலேசிய குடும்பத்தினருக்கும் பகிர்ந்தளித்ததால், இன்றைக்கும் மரிய ரொமேரோ போன்றவர்களால் மனித மாண்பு மனித நேயம் காணப்படுகிறது. எனவே அன்புக்குரியவர்களே, இறைவனின் அழைப்பை ஏற்று, தொன் போஸ்கோவின் வழியில் இறையரசைக் கட்டியெழுப்பிய மரிய ரொமேரோவை போன்று நாமும் முழுமையான நிறைவான மனித வாழ்வு வாழ்ந்து, இயேசுவின் சீடர்களாக வாழ்வதற்கு நாம் இறையன்பின் வடிவமாக மாற நம் அழைப்பினை உணர்ந்தவர்களாய் வாழ தொடர்ந்து இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தூய்மையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாகவும் சோர்வுற்றோருக்கு பலமாகவும், வழிதவறியோருக்கு நல்வழி காட்டியாகவும் திகழ்ந்து உமக்காக வாழும் வரத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. அமைதியின் இறைவா, இவ்வுலகில் அமைதி ஆட்சி செய்ய வேண்டுமெனில், ஆட்சியில் இருப்போர், அமைதிப் பெறவேண்டும். அமைதியின் சக்தியை உணரும் அறிவுத்திறன் பெறவேண்டும். மக்களுக்கு நீதி வழங்கவும், நன்மைத் தீமையைப் பகுத்தறியவும் தேவையான ஞானம் நிறைந்த உள்ளத்தை எங்கள் தலைவர்களுக்குத் தந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்
3. கருணைக் கடலே இறைவா, நிராகரிப்பு, புறக்கணிப்பு, நோயின் தாக்கம் போன்ற காரணங்களால் இச்சமுகத்திலிருந்து விலகி வாழும் ஏழை எளியோர்கள், கைவிடப்பட்ட பெற்றோர்கள், அனாதைகள் மீண்டும் அன்பின் உறவில் இணைந்திடவும், புது வாழ்வுப் பெறவும் அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. நாங்கள் நற்செயல் புரிவதற்கென்றே கிறிஸ்து இயேசு வழியாகப் படைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதை உணர்ந்து எம் இளையோர் அனைவரும் தங்கள் வாழ்க்கையில் நற்செயல்கள் புரிவதில் நாளுக்கு நாள் வளர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 14.07.2024 பொதுக்காலம் 15ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

I. ஆமோ. 7: 12-15 II. எபே. 1: 3-14 மாற்கு 6: 7-13

இறைப்பணி புரிபவர்கள் ஒத்த கருத்துடையவர்களாகவும் ஏற்றுக்கொண்டதை உறுதியோடு செய்பவர்களாகவும் இருக்க வேண்டும்

என்பதனை தெளிவாக அறிய முடிகிறது. இன்றைய இறைவார்த்தைகளின் வழியாக யார் என்ன சொன்னாலும், தடுத்தாலும் நமது பணிகளைத் தொடரத் தேவையான கருவிகளை கட்டாயமாக அணிந்துக்கொண்டு செல்ல வேண்டும். அப்போது தடையில்லா சேவைகள் நற்செய்தி அறிவிப்புப் பணிகள் செய்ய இயலும். பயணிக்கும் வழிகளில் பல இடர்ப்பாடுகள் நேரிடும். அதற்கேற்றாற்போல் சில பொருட்களை எடுத்துக் கொண்டு பயணிக்க வேண்டும் என்பதனையும் அறிய முடிகிறது.

பயணத்திற்கான பாதுகாப்புப் பொருட்கள் தவிர வேறு ஆடம்பரத் தேவைக்கான எதையும் (அதாவது பணம், பொருள்) எடுத்துச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது. காரணம் வேறு எவற்றின்மீதும் கவனம் செலுத்தி விடக்கூடாது எந்த நோக்கம் இலட்சியம் குறிக்கோளோடு செல்கிறோமோ அது அங்கு நிறைவேற வேண்டும். சிறிதளவும் கவனச் சிதறல்கள் வந்து விடக்கூடாது. மிகக் கவனத்தோடும், நேர்மையோடும் செல்லும்போது இறைவனும் தூய ஆவியும் துணை நிற்பார்கள். தீமைகளை வெல்லும் ஆற்றல் மிகுதியாக கிடைக்கும். திருத்தூதர்கள் சென்றார்கள் தங்களது பணிகள் மூலம் வென்றார்கள். அதனை மிகுந்த அதிசயத்தோடும் ஆச்சரியத்தோடும் மகிழ்வோடும் வந்து தங்கள் அனுபவங்களை அறிவிக்கின்றனர். நாமும் இறைக் கட்டளைகளை நம்பிக்கையோடு ஏற்று உலகெங்கும் சென்று தடைகளை அகற்றி மக்களை மனமாற்றம் அடையச் செய்து இறையாட்சியை அமைப்போம், வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையோடு இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, திருஅவையின் திருப்பணியாளர்கள் இன்றைய இறைவார்த்தை முத்துக்கள் உதிர்த்த உண்மைகளை ஏற்று தேவையான கருவிகளை வைத்துக்கொண்டு தேவையற்றதை அகற்றி திருத்தூதர்கள் போன்று வெற்றியடைந்து சான்று பகிர வேண்டிய அருள் வரங்களை பெற்றிடவேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பு இறைவா, இந்திய திருநாட்டையாள தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் நீதி நேர்மையை கைக்கொண்டு மக்கள் அனைவரும் ஒற்றுமை, சமாதானம், அமைதியோடு வாழ தங்களை அர்ப்பணித்து வாழும் பரந்தமனதைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.
3. தியாகமே உருவான இறைவா, உமது திரு இருதய அன்பை இரக்கத்தை நாங்கள் உணர்ந்து அதற்கு எதிர்மறையாக செயல்படாமல் நேர்மறையாக செயல்பட்டு அவ்வன்பை பிறருக்கும் அளித்து வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
4. உண்மைக்கு சான்று பகிரச் சொன்ன இறைவா, நற்செய்தி அறிவிப்புப் பணிகளில் நாங்கள் சிறப்பாக பணியாற்றி உலகை இறைவனுக்கு அர்ப்பணித்து வாழ வேண்டிய வரங்களை பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

## 16.07.2024 கார்மேல் மலை புனித கன்னி மரியா திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிசம்பந்தன்

இறையேசுவின் இனிய திருக்குலமே, இன்றைய நாள் நாம் இயேசுவின் தாய் அன்னை மரியாள் கார்மேல் மலை மாதாவாக உருவான நாளை சிறப்பிக்கின்றோம். விவிலியத்தில் ஒரேபு மலை, சீனாய் மலை, தாபோர் மலை, கல்வாரி மலை என்ற பல சிறப்பு வாய்ந்த மலைகள் இருப்பினும் கார்மேல் மலைக்கு ஒரு தனி சிறப்புண்டு. கார்மேல் என்றால் எபிரேய மொழியில் அழகிய பூந்தோட்டம் என்றும் பொருள்படும். இறைவாக்கினர் எலியாவின் காலத்தில் கார்மேல் மலை இறைவழிபாட்டின் ஒரு தலமாகவே இருந்து வந்தது. எலியா பாகல் தெய்வத்தை வழிபட்டவர்களை தோற்கடித்து யாவே கடவுளின் மகத்துவத்தை உணர்த்தியது இந்த மலையில்தான். மழை வராத காலத்தில் மழையை வரவழைத்து இறைப்பிரசன்னம் இந்த மலைக்கு உண்டு என்பதை வரலாறு உணர்த்தியது. கார்மேல் மலை கன்னிமரியாள் என்றுரைக்க மூன்று காரணங்கள் உள்ளன. இறைவாக்கினர் எலியாவின் காலத்திலேயே கன்னியின் வயிற்றில் மீட்பர் உதிப்பார் என்று இறைவாக்கினர்கள் செபதபத்தில் காத்திருந்தார்கள் என்று கூறப்படுகிறது. எலியா கண்ட காட்சி கன்னிமரியாள் "அமலஉற்பவி"யாக பிறந்ததற்கு முன்னடையாளமாக கன்னியின் வயிற்றில் மீட்பர் பிறப்பார் என்ற இறைவாக்கினர்களின் காத்திருப்பு. 1251ல் "சைமன் ஸ்டோக்" என்ற தலைமை துறவிக்கு அன்னை காட்சி தந்து தனக்கு விழா எடுக்க சொன்னது கார்மேல் அன்னை என்று அழைக்க சொன்னது.

இறைவாக்கினர் எலியா கண்ட காட்சித்தான் என்ன? கடலிலிருந்து கையளவு மேகம் எழும்புவதை கண்டார். எழுந்த மேகம் உவர்ப்பு நீரிலிருந்து உருவாகியது. ஆனால் மேகத்தில் சேர்ந்திருக்கும் நீரில் உவர்ப்பு சேர்வதில்லை. அதுபோன்றுதான் கன்னிமரியாள் மனுக்குலத்தில் பிறந்தாலும் அவரை ஜென்ம பாவம் தீண்டவில்லை என்பதைதான் காட்சி கூறுகிறது என்று இறையியலாளர்கள் தங்கள் கருத்தை முன்வைக்கிறார்கள். திருமுழுக்கு யோவான் காலம்வரை இந்த இறைவாக்கினர்கள் செப தபத்தில் இருந்தார்கள் என்று பல சான்றுகள் கூறுகிறது. 1251 ஜூலை 16ல் "சைமன் ஸ்டோக்" என்ற துறவி தவத்தில் இருந்தபோது கார்மேல் அன்னை ஒருகையில் இயேசு குழந்தையையும் மறுகையில் குருந்தோல் அங்கி ஒன்றையும் வைத்திருந்தார். அதை துறவிக்கு பலியாக தந்தார். அதே அங்கி பின் பொது மக்களின் பக்திக்கு உத்தரியமாக மாறியது. உத்தரியம் அணிந்தவர்கள் நரகத்திற்கு செல்லமாட்டார்கள் என்று கார்மேல் அன்னையே வாக்குறுதி தந்தார்கள். "உத்தரியம்" விண்ணுலகிற்கு செல்ல ஒரு எளிய வழி என்று கூறப்படுகிறது. உத்தரியம் அணிந்தவர்களை மரியன்னை தனிகவனத்துடன் பாதுகாப்பார் என்ற உறுதியுடன் நாமும் உத்தரியம் அணிவோம். அன்னையின் பாதுகாப்பை உணர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பு தந்தையே இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் மற்றும் திருநிலையினர் அனைவரையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். நீர் உம் அன்னையின் அரவணைப்பில் வழிநடத்தவும், இறையசை கட்டியெழுப்பும் பணியில் தொய்வின்றி சிறப்பாக செயல்பட நல்ல உடல்உள்ள நலனளித்து பாதுகாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பின் அடைக்கலமே, இன்றைய உலகில் பிள்ளைகள் தங்களின் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து, வாழ்வின் முன்னேற்றப் பாதையை சிறப்பாக அமைத்துக்கொண்டு, வீட்டிற்கும் நாட்டிற்கும் ஏற்ற முறையில் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. பாதுகாக்கும் பரம்பொருளே எம் இறைவா, எமது இந்திய நாட்டில் பொறுப்பேற்றிருக்கும் அரசியல் தலைவர்கள் அனைவரும் நாட்டின் வளர்ச்சிக்காகவும், மக்களின் நலனுக்காகவும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளோம் என்ற சிந்தனையில் நல்ல செயல் திட்டங்களை தீட்டி மக்களின் வாழ்வை முன்னேற்றப் பாதையில் நடத்தியருள அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 21.07.2024 பொதுக்காலம் 16ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. லதா சுரேஷ்

I. எரே. 23: 1-6 II. எபே. 2: 13-18 மாற்கு 6: 30-34

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்றைய வாசகங்கள் அனைத்தும் இறைவனின் இரக்கத்தையும் பரிவையும் அவர்தன் படைப்புகளில் உன்னதமான மனிதப் படைப்பின் மீட்பு அவர்களின்மீதுள்ள அக்கறையைக் காட்டுகின்றது. தன் மக்களை வழிநடத்த ஏற்படுத்தப்பட்ட அரசர்கள் இறைவாக்கினர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை பேணி வழி நடத்தாமல் சிதறடித்துவிட்டனர். அதனால் மேய்ப்பர் இல்லாத ஆடுகளைப்போல வாழ்வின் நெறிமுறைகள் அறியாமல் தன்னைவிட்டு பிரிந்து அலைந்து திரிந்தவர்கள்மீது இறைவன் பரிவுக்கொண்டார். தம் மக்களை மீண்டும் கூட்டிச் சேர்க்க தன் ஒரே மகனை உலகை மீட்பதற்காக அனுப்பி வைத்தார். மீட்பராக அனுப்பப்பட்ட இறைமகன் இயேசு தன் பாடுகளாலும், இரத்தத்தாலும், இறைவனுக்கும், மனிதர்களுக்கும் இடையிலிருந்த தடைகளை உடைத்து நெருக்கமான உறவினை அன்பின் பாதையை அமைத்துக் கொடுத்தார். தன் பாவங்களால் தந்தையாகிய இறைவனிடம் இருந்து தொலைவில் இருந்தவர்களை இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் அவருக்கு அருகாமையில் தாயின் அருகிலுள்ள சேய்க்கு எத்தகைய பாதுகாப்பு ஒரு இனம்புரியாத சந்தோஷம் கிடைக்குமோ அவ்வுணர்வினை உண்டாக்கினார்.

மோசே காலத்தில் உருவாக்கப்பட்ட பல்வேறு சட்டங்கள் தகர்த்தெறியப்பட்டு அன்பு, ஒப்புரவு என்னும் ஒரே மொழியால் அனைவரும் அவரின் வார்த்தைக்கு செவிமடுப்பவர்களாய் கூட்டி சேர்க்கப்பட்டுள்ளனர். இறைமகன் இயேசுவின் சிலுவை விண்ணையும் மண்ணையும் உலகின் நான்கு திசைகளையும் இணைக்கும் பாலமாக அமைந்துள்ளது. இறைவனுக்கு ஓய்வென்பதில்லை தன்னை நாடி வரும் மக்களின் துன்பங்களை கண்ணோக்கினார். அவரின் வல்லமையை உணர்ந்தவர்களை புறம்பே தள்ளாமல் எந்நாளும் தன் கனிவான கரத்தினால் பாதுகாப்பேன் என்று இறைவன் நமக்கருளும் வாக்கை ஏற்போம். இறைவனின் கொட்டிலில் அவரின் பாதுகாப்பில் எந்நாளும் வாழும் ஆடுகளாய் அவரின் வார்த்தைக்கு செவிமடுப்போம். நாம் சிதறிப்போகாமல் நம் சிந்தையை காக்க இத்திருப்பலியில் இணைவோம். இறையாசீர் பெற்றுச் செல்வோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் இறைவா, சிதறிக்கப்பட்ட ஆடுகளை கூட்டி ஒன்றுசேர்க்க உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரிடமும் ஒப்படைக்கப்பட்ட மந்தைகளை உம் திருவுலத்திற்கேற்ப வழிநடத்திச் செல்ல தேவையான உடல்உள்ள நலனளித்து பாதுகாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. பாதுகாப்பின் பெட்டகமே இறைவா, உம் வார்த்தையால் கோள்களும் அதன் எல்லைகளும் வரையறுக்கப்பட்டுள்ளது. மனிதன் தன் பலத்தைக் காட்ட எல்லைகளை விரிவுப்படுத்தி இன்றும் எல்லைப்போர்கள் நடந்துக் கொண்டிருக்கின்றது. நீரே அவற்றை தடுத்தி நிறுத்தி ஒற்றுமை, அமைதி நிலவ அருள்புரியுமாறு உம்மை வேண்டுகிறோம்.

3. கருணையின் கடலே எம் இறைவா, பெண் சுதந்திரம் என்று வாயளவில் மட்டும் பேசிவிட்டு பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள், பாலியல் பலாத்காரம், சிசுக்கொலை, அடிமைத்தனம் போன்ற பலவிதமான பிரச்சனைகளிலிருந்து, அவர்களின் உரிமைகளை பெற்றுத்தந்து திருக்குடும்பமாக தங்களின் குடும்பங்களை வழிநடத்திட அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

4. நல்லாயனே எம் இறைவா, இன்றைய இளையோர்கள் ஆயனில்லா ஆடுகளைப்போன்று தங்களின் எதிர்காலத்தைப்பற்றி அறியாமல் மனம்போன போக்கில் சென்று தங்களின் வாழ்வை சீரழித்துக் கொள்ளாமல் நல்ல ஞானத்தையும் அறிவையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 22.07.2024 புனித மகதலா மரியா விழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

இறையேசுவில் பிரியமானவர்களே, இன்று திருஅவையானது புனித மகதலா மரியாவின் திருவிழாவினை கொண்டாடுகிறது. புனித மரிய மகதலா மரியா இயேசுவோடு பயணித்தவர். இயேசு சிலுவையில் இறக்கின்றபோது சிலுவையடியில் நின்றவர். இயேசுவின் உயிர்ப்பை முதன் முதலில் உலகிற்கு தெரிவிக்க இயேசுவால் அனுப்பப்பட்டவர். புனித மகதலா மரியா இயேசுவின்மீது வைத்திருந்த அன்பையும், நம்பிக்கையும் நற்செய்தியாளர்கள் எழுதிய நற்செய்தியின் வழியாக சிந்திக்க திருஅவை நமக்கு அழைப்பு விடுக்கின்றது. இயேசுவால் குணப்படுத்தப்பட்ட மகதலா மரியாள், தன்னை பிடித்திருந்த ஏழு பேய்களிலிருந்து விடுதலை அளித்த இயேசுவை நன்றியோடு தன் வாழ்நாள் முழுவதும் நினைவு கூறுகிறார். தன்னை குணமாக்கிய இயேசுவோடு உடனிருந்து அவருடைய ஊழியத்தில் பங்கெடுத்து, இயேசுவுக்கு பணிவிடைசெய்து நன்றி மறவாத மகதலா மரியாவாக திகழ்ந்தார் (லூக். 8: 1-3).

இயேசுவை சிலுவையில் அறைந்தபின் சிலுவையின் அடியில் நின்றுக்கொண்டிருந்த இயேசுவின் தாய் மரியாவுக்கும், மற்றப் பெண்களுக்கும் துணையாக நின்று இயேசுவிடம் உதவி பெற்றவர்கள் உடனிருந்தவர்கள் அவரைவிட்டு ஓடிப்போன நிலையில் மகதலா மரியா துயரத்தில் இருப்பவர்களின் அருகேயிருந்து துக்கத்தில் உடன் நின்ற மகதலா மரியாவாக இருந்தார் (யோவா. 19:25). இயேசுவின் உடலை சிலுவையிலிருந்து அடக்கம் செய்யும் நிகழ்வின்போது, தன்னை ஏழு பிசாசுகளிடமிருந்து குணப்படுத்திய தன்னுடைய நேசருக்காக யூத கோட்பாடுகளை மீறி தடைகளைத் தாண்டி துணிவோடு இயேசுவை அடக்கம் செய்யும் நிகழ்வினை, இயேசுவை எங்கே, எப்படி வைக்கிறார்கள் என்பதை அன்பினால் உந்தப்பட்டு கடைசிவரை கூர்ந்து கவனித்த மகதலா மரியாவாக செயல்படுகிறார் (மாற்கு 15: 41-47). ஓய்வு நாளின் முடிவுக்காக காத்திருந்த மகதலா மரியா, யாக்கோபுவின் தாய் சலோமி ஆகியோருடன் இயேசுவின் உடலில் நறுமணத்தைலம் பூசுவதற்காக தன்னுடைய உழைப்பினால் கிடைத்த வருமானத்திலிருந்து இயேசுவுக்காக அன்போடு வாங்கிச் செல்கின்றார்.

இயேசுவின் சீடர்களோ சகோதரர்களோ செய்ய முன்வராத நிலையில் தன்னை குணமாக்கிய இயேசுவுக்கு செய்ய வேண்டிய மரியாதையை தீவிரமாக செய்ய நினைத்த மகதலா மரியா கல்லறைத் தோட்டத்தில் அழுகையோடு தேடிய மகதலா மரியாவை இயேசு "மரியா" என்று அழைத்து தன்னை வெளிப்படுத்தி, தன்னுடைய அன்பையும், ஆறுதலையும் அளித்ததோடு, அப்போஸ்தலர்களுக்கு தன்னுடைய உயிர்ப்பின் செய்தியை முதன்முதலில் உலகிற்கு அறிவிக்கும்படி கூறுகிறார். உயிர்த்தெழுந்த இயேசுவை முதலில் உலகிற்கு அறிவித்த மகதலா

மரியாவாக உயர்த்தப்படுகிறார் (யோவா. 20: 16-18). மகதலா மரியா இயேசுவை அக்கரையோடு, நன்றியோடு, அன்போடு தேடியதைப்போல நாமும் இயேசுவை தேடுவோம். இயேசு நமக்குத் தந்துள்ள அனைத்து நன்மைகளுக்காக நாமும் பிறருக்காக ஊழியம் செய்து, மரியாவைப்போல இயேசுவின் குரலை அடையாளம் கொள்வோம். இயேசுவைக் கண்டோம், என்று மற்றவர்களுக்கும் அறிவிப்போம் என்ற ஆழ்ந்த நம்பிக்கையோடும் உறுதியோடும் இறையேசுவின் அருளைப்பெற்று வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, உம் திருஅவையை வழிநடத்த உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவரையும் உமது தூய ஆவியின் வரங்களினால் நிரப்பி, திருஅவையை நிலைவாழ்விற்கு நடத்திச்செல்ல உமது அருள் வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. ஒளியாம் இறைவா, விடியற்காலையில் உம்மைத் தேடுகிறவர்கள் கண்டடைவார்கள் என்ற உம் வாக்கிற்கேற்ப நாங்களும் எங்கள் வாழ்க்கைப் பயணத்தில் தொடர்ந்து நடக்க உம் அருள்வரங்களைப் பெற்று வாழும் ஆற்றலையும், ஞானத்தையும் எங்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பே உருவான இறைவா, நீர் எங்களுக்கு அளித்துள்ள எல்லா நன்மைகளுக்கும் நன்றி செலுத்துகிறோம். நாங்களும் உமக்காகவே வாழவும், உம்முடைய பணியை நாங்கள் தொடர்ந்து செய்யவும், துன்பப்படுவோருக்கு ஆறுதலாகவும், துணையாகவும் இருந்து வழிநடத்த உம் அருள் வரங்களைப் பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 24.07.2024 புனித ஷார்பல் மாக்லுப் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. மாலா செபமாலை

இறையேசுவின் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று நாம் சிறப்பிக்கும் புனிதர் ஷார்பல் மாக்லுப் மே 8ஆம் நாள் 1825ஆம் வருடம், 5வது குழந்தையாக மலைப்பிரதேசமான "பெக்காகப்ரா" என்னுமிடத்தில் லெபனான் நாட்டில் பிறந்தார். இவரது தந்தை ஆண்டன் ஜாரவு மாக்லுப், தாய் பிரிஜிட்டா ஷார்பல் மாக்லுப். அவர் 1851ஆம் ஆண்டு "மாரோனைட்" சபையில் அவர் லேடி ஆப் மேபக்க என்னும் இடத்தில் துறவியாகச் சேர்ந்தார். தனது பெயரை கிறிஸ்தவ வேதப்படி "ஷார்பல்" என சூட்டிக்கொண்டார். தனது இறையியல் குருத்துவத்தை நவம்பர் 1ம் தேதி 1853ல் பெற்றுக்கொண்டார். "இறையியல்" மற்றும் "தத்துவக் கல்வி"யையும் கற்றுத்தேர்ந்தார். துறவற வாழ்க்கையில் தனிமையாக 23 வருடங்கள் வாழ்ந்து வந்தார். டிசம்பர் 24, 1898ல் தனது மனித வாழ்விற்கு விடைகொடுத்தார்.

சிலமாதங்கள் கழித்து இவரது கல்லறைமீது மிகவும் பிரகாசமான ஒளிமேலிட்டது. கல்லறை திறக்கப்பட்டு சோதனை செய்தபோது மனித இரத்தமானது இவர் உடலிலிருந்து வழிந்தோடியது. மருத்துவர்கள் மருத்துவ ஆராய்ச்சியில் என்ன நிகழ்ந்துள்ளது என்பது பற்றி பதிலேதும் சொல்லவில்லை. 1950, 1952ம் இவரது திருவுடலை ஆராய்ச்சி செய்தபோது உடல் அழியாத நிலையில் இருந்தது. அப்பொழுதும் இரத்தம் வழிந்தோடியது. 1955ம் ஆண்டு 5வதுமுறை இவரது கல்லறையை திறந்தபோது, இவர் இறந்தபொழுதிருந்த அதே நிலையில் அழியாமல் இருந்தது. அதிலும் அவரின் உடல் உயிருடன் இருப்பதுபோல் தோற்றமளித்தது.

1965ல் இவரது உடல் பாதுகாக்கப்பட்டு வந்தது. 1976ல் கல்லறைத் திறந்து இவரது உடலை பார்க்கும்போது தன்னுடைய எலும்புகள் அனைத்தும் அப்படியே சிதையாமல் இருந்தது. இவரை அருளாளராக திருத்தந்தை 6ம் பவுல் 1929ல் உயர்த்தினார். அப்பொழுது "இறைவனின் சேவகன்" என்ற பெயர் புனித சார்பல்க்கு சூட்டப்பட்டது. அக்டோபர் 9ம் நாள் 1977ம் ஆண்டு புனிதர் பட்டம் வழங்கப்பட்டது. அப்பொழுது ஆயர் பிரான்சிஸ் ஐயாக் புனிதர் சார்பல்க்கு இவ்வாறு பெயர் சூட்டினார். அக்டோபர் 28ம் தேதி 2017ம் ஆண்டு திருஉருவத்தை புனித பாட்ரிக் பேராலயத்தில் நிறுவினார். இப்புனிதர்போல் நாமும் தூய்மையுடன் வாழ்ந்து இறைவழியில் பயணிக்க இத்திருப்பலியில் பக்தியோடு கலந்துக் கொள்வோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பு தந்தையே இறைவா, எம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் உம்மை உள்ளன்போடு நேசித்து, விழுமியங்களை கடைப்பிடித்து, திருப்பாதையில் நாளும் நடந்திட தூய ஆவியின் அருளைப்பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. நேர்மையின் நாயகரே, உலகையாளும் தலைவர்கள் அநீதிக்கும், வன்முறைக்கும் துணைபோகாமல் உண்மையை உணர்த்தும் இறைவழியில் நின்று மக்களை வழிநடத்திடவும், அவர்களின் தேவைகளை உணர்ந்து செயல்பட தாராள உள்ளத்தை அவர்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. ஒற்றுமைக்கு ஒளிவிளக்கானவரே, நாங்கள் அனைவரும் இறைமக்கள் என்னும் ஒற்றுமை எண்ணத்தோடு வாழவும், வரமருளவும், அருகாமையிலுள்ளோரையும் சகோதர சகோதரிகள் என்ற கண்ணோட்டத்தோடு பாவித்து அவர்களையும் அன்புசெய்து அரவணைக்கும் நல்லுள்ளம் கொண்டவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 25.07.2024 புனித யாக்கோபு திருத்தூதர் விழா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜீசஸ் மகுட மன்னன்

சீடத்துவ பொறுப்பில் வாழ்ந்து வரும் சகோதர சகோதரிகளே, இன்று திருஅவை திருத்தூதர் யாக்கோபு விழாவினைக் கொண்டாட நம்மை அழைக்கிறது. இவர் கலிலேயாவிலுள்ள பெத்சாயிதா நகரில் செபதேயு-சலோமிக்கு பிறந்தவர். இவருடைய இளைய சகோதரர் யோவான் ஆவார். இவர் முதலில் திருமுழுக்கு யோவானின் சீடராக இருந்தவர். சகோதரர் இருவரும் தந்தையுடன் வலைகளைப் பழுதுபார்த்துக்கொண்டிருந்தபோது இயேசு அவர்களை அழைக்க, உடனே இயேசுவைப் பின்தொடர்ந்து சென்றனர். அவர்களுடைய தாய் சலோமி இயேசுவிடம் வலப்புறம் ஒருவரும், இடப்புறம் ஒருவரும் அமர, அனுமதி கேட்டார். ஆனால் இயேசு அது தந்தையின் விருப்பம் எனக்கூறி விட்டார். குறிப்பாக, யாயீரின் மகளை இயேசு உயிர்த்தெழச் செய்தபோதும், தாபோர் மலையில் இயேசு உருமாறிய போதும் இறுதியாக இயேசு கெத்சமணி தோட்டத்தில் மன்றாடியபோதும் (மத். 26:36-46) ஆண்டவர் அழைத்துச் சென்றவர்களில் யாக்கோபுவும் ஒருவர். இவர் ஸ்பெயின் யூதேயா நாடுகளுக்கு மாறிமாறி நற்செய்தி அறிவித்தார்.

இவர் "திருப்பயணிகளின் பாதுகாவலர்" என அழைக்கப்பட்டார். வெள்ளைக் குதிரையில் காட்சி கொடுத்தார். சமாரியா, இத்தாலி, ஸ்பானிய இடங்களில் பல்லாயிரக்கணக்கானவர்களை திருமறையில் சேர்த்தார். யூதேயாவில் மார்ச் 25ம் நாள் கி.பி. 42ம் ஆண்டில் ஏரோது மன்னன் அக்கிரப்பாவால் தலை, கழுத்து அறுபட்டு மறைசாட்சியாக மரித்தார். இவரது உடல் இஸ்பானியாவிலுள்ள கம்போஸ்தெல்லாவில் கல்லறைமீது திருத்தலமாக கட்டப்பட்டுள்ளது. இது ஐரோப்பாவில் புகழ் பெற்று விளங்குகிறது. மக்கள் பொறுப்புக்களை மறந்து சலுகைகளை மட்டும் நாடித்தேடிடுவோர் தான் வாழும் சமூகத்திற்குச் சுமையாக மாறுகிறார்கள். இம்மனநிலை ஆபத்தானது என இறைவன் எச்சரிப்பதை உணர்ந்து வாழ நாம் பக்தியோடு இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. சென்று போதியுங்கள் என்று எங்களைப் பெயர் சொல்லி அழைத்தவரே, திருஅவையின் தலைவர்களான திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இறைவனின் திருவுளப்படி தங்களின் வாழ்வில் கொடுக்கப்பட்ட பணியினை உமது அருளாசிரால் செயல்படுத்தக்கூடிய வல்லமையை அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.
2. ஒற்றுமையின் எடுத்துக்காட்டே எம் தலைவா, பங்கிலுள்ள குடும்பங்கள், அன்பியங்கள் ஒன்றோடொன்று உள்ளார்ந்த நட்புணர்வோடு திருஅவையின் பணிகளை குருவானவரோடு சேர்ந்து எவ்வித

எதிர்ப்பார்ப்புமின்றி அன்போடும் தாராள உள்ளத்தோடும் சேர்ந்து பணிபுரிய அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. நீதியின் நாயகனே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள், நீதி, நேர்மை, தியாக மனப்பான்மையோடு மக்களின் தேவைகளை நிறைவேற்றிட தாராள உள்ளம் கொண்டவர்களாக திகழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 26.07.2024 புனிதர்கள் சுவக்கின், அன்னா திருப்பலி

**முன்னுரை**

திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

இறையேசுவில் பிரியமானவர்களே, இவர்கள் இருவரும் தாவீது அரசருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பக்தி நிறைந்த வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். இறைவனின் பார்வையில் இவர்கள் நீதிமான்கள். இந்தத் தம்பதியினருக்கு நெடுங்காலமாகக் குழந்தைகள் இல்லை. இவர்கள் இறைவனிடம் தொடர்ந்து மன்றாடி வந்தனர். வானதூதர் வழியாக மரியாவின் பிறப்பு அறிவிக்கப்பட்டது. அதனால் மனம் மகிழ்ந்த இவர்கள் குழந்தையை எருசலேம் ஆலயத்தில் அர்ப்பணம் செய்வதாக நேர்ந்துக்கொண்டனர். பிறகு மரியா பிறந்தார். மரியா கடலின் நட்சத்திரம் என்று குழந்தைக்கு இவர்கள் பெயரிட்டனர். தனது மகளை பக்தி நிறைந்த வாழ்க்கை வாழச் செய்தனர்.

6ம் நூற்றாண்டிலிருந்து அன்னாளுக்கு வணக்கம் செலுத்தப்பட்டு வருகிறது. 550ம் ஆண்டு கான்ஸ்டான்டின் நோபிளில் ஆட்சி செய்த அரசர் அன்னாளுக்கு பேராலயம் கட்டினான். புனித சுவக்கீனுக்கு எருசலேமில் ஓர் ஆலயம் கட்டப்பட்டது. உலகமெங்கும் அன்னாள் பெயரில் பள்ளிகள் தொடங்கப்பட்டன. நல்வழியில் கடவுள் குழந்தைகளை நடத்த வேண்டுமென விரும்பும் கத்தோலிக்கர்களுக்கு அன்னாள்தான் முன்னோடியாகவும், வழிக்காட்டியாகவும் தேவமாதாவை பக்திவழியில் வளர்த்து கடவுளுக்குத் தாயாக்கினார் அன்னாள். அன்னாவைப் போன்று நாமும் நமது குழந்தைகளை இறைவழியில் வளர்த்து கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ, வளரவேண்டுமென்று இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. வாழ்வின் வழியே இறைவா, எங்களை வழிநடத்த கொடுத்திருக்கின்ற எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் எங்களது வழிகாட்டிகளான உமது சீடர்கள் காட்டும் நல்வழியைப் பின்பற்றி எங்கள் வாழ்வு முழுவதும் உமக்கு ஏற்றதாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. குழந்தைகளாக மாறாவிட்டால் விண்ணரசில் நுழையமுடியாது என்றவரே, புனித அன்னாள் குழந்தையான மரியாவை இறையச்சம் கொண்ட பக்தியுள்ள குழந்தையாக வளர்த்தெடுத்ததுபோல எங்கள் குழந்தைகளை தன்னலம் துறந்து பிறர் நலம் போற்றும் மாண்பை எமது

குழந்தைகள் மனதில் பதியச் செய்ய அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. தலைவர்களுக்கெல்லாம் மேலான தலைவரே, எங்கள் நாட்டுத் தலைவர்கள் அரசு அதிகாரிகள் இலஞ்சம் தவிர்த்து தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பணிகளைத் திறம்படச் செய்து மக்களின் தேவைகளை அறிந்து செயல்பட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 28.07.2024 பொதுக்காலம் 17ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிசம்பந்தன்

I. 2அர. 4: 42-44 II. எபே. 4: 1-6 யோவா. 6: 1-15

இறையேசுவின் இனிய திருக்குலமே, இன்று நாம் பொதுக்காலத்தின் 17ம் ஞாயிறைச் சிறப்பிக்கின்றோம். இன்றைய வாசகங்கள் இயேசுவுக்கு மக்கள்மீதுள்ள பரிவும் பாசமும் எத்தகையது என்பதை பறைசாற்றுகின்றன. உலகிலுள்ள அனைத்து உயிர்களுக்கும் உணவளிப்பதும், அவரவர் விருப்பத்தை நிறைவேற்றுவதிலும் ஆண்டவர் ஆற்றல் மிக்கவர், இரக்கம் மிகுந்தவர் என்பதையும் அவரின் அழைப்பைப் பெற்றுக்கொண்ட அனைவரும் மனத்தாழ்மையோடும், கனிவோடும், பொறுமையோடும் ஒருவருக்கொருவர் அன்பை பொழிந்து அமைதியுடன் இணைந்து வாழவும், தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டை காத்துக்கொள்ளவும், அவரிடம் கொண்டுள்ள நம்பிக்கையையும், எல்லோருக்கும் கடவுளும் தந்தையுமானவரும் அவரே என்றும் திருமுழுக்கால் நாம் அனைவரும் ஒன்றிணைக்கப்பட்டிக்கிறோம். எல்லாருக்குள்ளும் செயலாற்றுபவர் அவரே என்பதை நமக்கு உணர்த்துகிறது.

நற்செய்தி வாசகத்திலும், யோவான் கூறுவது, இயேசுவைப் பின்தொடர்ந்த மக்களுக்கு அவர் செய்த அருளடையாளங்களை கண்டு மக்கள் கூட்டம் அதிகமாவதை கண்டு தன் உரையை கேட்க வந்த மக்கள் பசியாற என்ன செய்வது என்பதை அறிந்து, சிறுவன் கொண்டு வந்த ஐந்து வாற்கோதுமை அப்பங்களையும், இரண்டு மீன்களையும் கடவுளுக்கு நன்றி செலுத்தி பகிர்ந்தளிக்க கட்டளையிட்டதையும் ஐந்தாயிரம் ஆண்களும், மேலும் வந்திருந்த மகளிருக்கும் உணவளித்து மீதி 12 கூடைகளிலும் நிரப்பி பெரும் அற்புதத்தை நிகழ்த்தி பகிர்ந்து உண்ணுவது மிகவும் அவசியம் என்பதை தெளிவுப்படுத்தி தேவைப்படுவோருக்கு உதவ வேண்டுமென்ற படிப்பினையை நமக்களிக்கிறார். ஆகவே இருப்பதை பகிர்ந்துண்டு வாழ்வோம், நமக்குள்ளதை பிறருக்கும் பகிர்வோம் என்ற உறுதியோடு இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அனைத்துலக வேந்தனே இறைவா, நம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் மற்றும் திருநிலையினர்

அனைவரையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். சாத்தானின் சோதனைகள், தன்னலமான கொள்கைகள், பொருளாசை, பேராசை இவைகளினால் அலைகழிக்கப்படாமல், தன் கிறிஸ்துவ பணி ஒன்றை இலக்காக கொண்டு சேவைபுரியும் உறுதிமிக்க உள்ளத்தை அளித்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. பகிர்ந்துண்டு வாழ கற்பித்த இறைவா, உலகம் ஆடம்பரங்களை பெரிதாக எண்ணாமல் அனைவருக்கும் உதவும் மனப்பான்மை வளரவும், இருப்பதை பகிர்ந்து கொடுத்து வாழும் மனத்தூய்மை பெறவும் அனைவரும் சமம் என்ற உணர்வை பெற்று வாழும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. வாழ்வளிக்கும் இறைவா, குடும்பங்களில் சுயநலம் காரணமாக முதியவர்களையும், நோயாளிகளையும் சுமையாகக் கருதி முதியோர் இல்லங்களில் பெற்றோர்களையும், உடன்பிறந்தோரையும் விட்டு விடுகின்றனர். இந்நிலைமாறி இரக்கமுள்ள இதயத்தோடு, உமக்கேற்ற பக்தியுள்ள கிறிஸ்தவ மக்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
4. பாதுகாப்பளிக்கும் இறைவா, பல்வேறு நாடுகளுக்கு திருஅவையின் கோட்பாடுகளுக்கு இணங்க பல்லாயிரக்கணக்கான மக்களோடு பணியாற்றும் அனைத்து துறவறத்தாருக்கும், பொதுநிலையினருக்கும் எவ்விதமான இடையூறுகளும் நேராமல் நீரே காத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 29.07.2016 தூய மார்த்தா, மரியா, லாசர் திருப்பலி

**முன்னுரை** திரு. ஜீசஸ் மகுட மன்னன்

இயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, தாயாம் திருஅவை புனிதர்களை மகிமைப்படுத்துகிறது. ஏனெனில், புனிதர்கள் இயேசுவின் வார்த்தைகளை வாழ்வாக்கினார்கள். திருஅவை இன்று புனித மார்த்தாவை நினைவுப்படுத்தி புனிதப்படுத்துகிறது. மார்த்தா இயேசுவின்மீது கொண்ட ஆழ்ந்த பற்றுறுதி, நம்பிக்கை, இன்றைய நற்செய்தியில் வெளிப்படுகின்றது. இயேசுவை மார்த்தா முழுமையாக நம்பினார். எனவேதான், இயேசுவே மீட்பர், கடவுளின் மகன், உலகிற்கு வரவிருக்கும் மெசியா என்று அறிக்கையிடுகிறார். மார்த்தா மரியாவின் சகோதரன் லாசர் இயேசுவின்மீது அளவில்லா நம்பிக்கைக்கொண்டு வாழ்ந்தவர். நமது இறைநம்பிக்கை நம்பிக்கையோடு நின்றுவிடாமல் அவைகள் புது வாழ்விற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்பதையே மார்த்தா வழியாக, இயேசு நமக்கு உணர்த்துகிறார். இயேசுவின்மீது கொண்ட ஆழ்ந்த பற்றுறுதி, நம்பிக்கை நம் வாழ்விலும் வெளிப்பட வேண்டும். கிறிஸ்து உயிர்க்கவில்லை என்றால் கிறிஸ்தவம் இல்லை. எனவே கிறிஸ்துவின் உயிர்ப்பை விசுவசிப்போம், அறிக்கையிடுவோம்,

விசுவாசத்தில் புனித மார்த்தாவைப்போல நாளும் வளர்வோம் என வாக்களித்துப் பக்தியோடு இன்றைய திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நம்பிக்கையின் நாயகனே இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால், ஆயர், குருக்கள், கன்னியர், துறவறத்தார், திருக்குடும்ப நிலையில் வாழ்வோர் அனைவரும் இயேசுவின் ஒளியில் நடப்பவர் இடறுவதில்லை எனும் நற்செய்தியை போதித்து, அனைவரும் இருளின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, முடிவில்லா பேரின்ப இறையரசுக்கு வந்து சேரத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. உயிர்த்தெழுதலும் வாழ்வுமான இறைவா, உம்மிடம் நம்பிக்கைக் கொள்வோர் இறப்பினும் வாழ்வர். உயிரோடு இருக்கும்போது நாங்கள் உம்மீது நம்பிக்கைக்கொண்டு முடிவில்லாப் பேரின்ப வீட்டில் என்றென்றும் வாழத் தேவையான வரங்களை தந்து நோயிலிருந்தும், ஆபத்துக்களிலிருந்தும், விபத்துக்களிலிருந்தும் காப்பாற்றி முழுமையான வாழ்வளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. ஆறுதல் அளிக்கும் இறைவா, உலக நாடுகளில் கலகம், தீவிரவாதம், வெளிநாட்டுப் படையெடுப்பு ஆகியவைகளால் மக்கள் பாதிக்கப்பட்டு, கொலை, கொள்ளையில் அகப்பட்டு, சமாதானம், ஒற்றுமை, மகிழ்வை இழந்து அகதிகளாக அண்டை நாடுகளில் அடைக்கலம் தேடி அலையும் மக்கள் அனைவருக்கும் ஆறுதலும், தேறுதலுமாக இருந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 31.07.2024 லொயோலா நகர்ப் புனித இஞ்ஞாசியார் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. மாலா செபமாலை

இறை இயேசுவில் நம்பிக்கைக் கொண்ட இறைமக்களே ஒருவருடைய ஆளுமையில் வேகம் இருக்கும்போது அவர்களின் கால்கள் காயப்பட்டாலும் அந்த வேகத்தைத் தடுக்க முடியாது என்பதற்கு புனித இஞ்ஞாசியார் தகுந்த மிகப் பெரிய உதாரணம். இவர் 1491ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23ஆம் நாள் "ஸ்பெயின்" நாட்டிலுள்ள "அஸ்பெத்தியா" நகரிலுள்ள லொயோலா என்னும் கோட்டையில் லோபாஸ் குடும்பத்தில் 13வது குழந்தையாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் "இனிகோ". இவர் போர் வீரராகத் திகழ வேண்டுமென்று இராணுவப் பயிற்சி பெற்று சிறந்த போர் வீரராக உயர்ந்தார்.

1521ஆம் ஆண்டு பிரான்ஸ்சுடன் நடந்த போரில் இவர் கடுமையாகத் தாக்கப்பட்டு வலது கால் முறிந்து படுக்கையில் கிடந்தார். படுக்கையில் படிக்க புத்தகங்களைக் கேட்ட இவருக்கு இவரது உடன் பிறந்த தங்கை அருட்சகோதரியால் இயேசுவின் வாழ்க்கை வரலாறு அடங்கிய நூலைத் தந்தார். இந்நூலைப் படித்ததால் வாழ்வில் மிகப்பெரிய

திருப்புமுனை ஏற்பட்டது. துறவியாக வாழ வேண்டுமென்று தீர்மானித்து எருசலேம் புனித பயணம் மேற்கொண்டு இயேசு கால் பதித்த இடங்களை முத்தமிட்டார். இவர் பாரிசில் குருத்துவப் பணிக்கு ஆன்மீகப் பயிற்சி பெற சேர்ந்து இறையியல் படித்து 1538ல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இவரது சிறப்பான பணி மறைக்கல்வி போதித்தல், சிறைக்கைதிகளை சந்தித்தல், போன்றவை இச்சபையின் நோக்கம். இனிகோ பாரிசில் இறையியல் படிக்கும்போது திருஅவையின் சீர்த்திருத்தக் காலம். புனித பிரான்சிஸ் சவேரியார் மற்றும் மூன்று தோழர் துறவிகளை சந்தித்து இயேசு சபையில் சேர உதவினார்.

இச்சபையின் உறுதியான விருதுவாக்குகள் கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிதல் இதனுடன் திருத்தந்தைக்கு எப்போதும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்பதாகும். 1538 ஆம் ஆண்டு இனிகோ குருவாக திருநிலைப் படுத்தப்பட்டார். புதியதாகத் தொடங்கப்பட்ட இயேசுசபை சரியாக 17 ஆண்டுகளுக்குப் பின்னர் முறியடிப்பதற்காகத் தோன்றியது போல் இருந்தது. புனித இஞ்ஞாசியார் புரோட்டஸ்டன்ட் இயக்கத்தைத் தடுத்து நிறுத்தும் சம்மட்டிபோல் தோன்றினாலும் இப்புனிதரின் மனப்பான்மை கனிவானது. இவர் தனது 65வது வயதில் 1556ல் காலமானார், 1622ல் புனிதராக உயர்த்தப்பட்டார். இப்புனிதரின் வழியை பின்பற்றி அவரின் நற்குணங்களை வேண்டி இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பே உருவான எம் இறைவா, திருஅவையின் தலைவரான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், பொதுநிலையினர் அனைவரையும் ஆசீர்வதியும், இவர்கள் அனைவரும் உம் வழியாய் செல்லவும், உம் வார்த்தைகளை வாழ்வாக்கி புனிதத்துவம் நிறையப் பெற்றவர்களாய் என்றும் நிலைத்திருக்க வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.

2. இரக்கமே உருவான எம் இறைவா, எம்மை வழிநடத்தும் அரசியல் தலைவர்களுக்காக மன்றாடுகிறோம். இவர்கள் தங்கள் சுயநலத்தை விட்டு மக்களின் நலனுக்காக அவர்கள் உழைக்க அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

3. அமைதியின் திருவுருவே ஆண்டவரே, இவ்வுலகப் போர்கள் நின்று, அமைதியான சூழ்நிலை உருவாகி, வறுமையில் உணவின்றி வாழும் நாடுகள் வளம் பெற்று வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. இரக்கமுள்ள இறைவா, இந்த மாய உலகில் எங்களுக்கு ஏற்படும் துன்பங்களைக் கண்டு உம்மை விட்டு விலகாமல் உம்மை எல்லா காலங்களிலும் நம்பிக்கையோடு பற்றிக் கொண்டு வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகின்றோம்.

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

## சந்தேகத் தோமாவா? சாதனைப் படைத்த தோமாவா?

திரு. பி. விக்டர்

நமது தாய் நாடாம் இந்தியாவின் திருத்தூதரான புனித தோமா அவர்களின் நினைவுத் திருவிழாவை இம்மாதம் நாம் கொண்டாடி சிறப்பிக்கின்றோம். "தோமா" என்றால் நமது நினைவுக்கு வருவது "உயிர்த்த இயேசுவே" அவர் நம் மனித செயல்தான். ஆண்டவராகிய இயேசு சிலுவையில் அறையப்பட்டு, அடக்கம் செய்யப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். உயிரோடு எழுந்த இயேசு அதே வாரத்தின் முதல் நாளில் சீடர்களுக்குத் தோன்றி "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" என்று வாழ்த்தினார். அவ்வேளையில் நமது "தோமா" அவர்கள் மற்ற சீடர்களோடு இருக்கவில்லை. பின்னர் "தோமா" வந்தபோது மற்ற சீடர்கள் இயேசு உயிர்த்தெழுந்து வந்து தங்களுக்கு வாழ்த்து சொன்ன செய்தியை "தோமாவுக்கு" அறிவிக்கிறார்கள். ஆனால் தோமாவோ அவர்கள் சொன்னதை ஏற்ற மறுத்து, "நான் இயேசுவின் கைகளிலும் அவரது விலாவிலும் உள்ள தழும்புகளில் என் விரலை இட்டாலொழிய நம்ப மாட்டேன்" என்றார் (யோவா. 20:25). ஆனால், இயேசுவோ தனது சீடர்களின் சந்தேகங்களுக்கு எப்போதுமே விளக்கங்கள் சொல்லி அவர்களைத் தெளிவுப்படுத்துவது வழக்கம். எனவே எட்டு நாட்களுக்கு பிறகு இயேசு மறுபடியும் தன் சீடர்களுக்கு காட்சியளித்தார். அப்போது தோமாவும் அவர்களோடு இருந்தார்.

இயேசு தோமாவிடம் இதோ என் கைகள் இங்கே உன் விரலை இட்டு, ஐயம் தீர்த்து, நம்பிக்கைக்கொள் என்றார் (யோவா. 20:27). அவ்வேளை தோமா "நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்" என்று தன் நம்பிக்கையை வெளிப்படுத்தினார். இதன் காரணமாகவே இன்றைக்கும் நம் மத்தியில் "தோமா" என்கிற பெயருடைய நபர்களைக் கண்டால் நம்பாத் தோமா" என்று அழைத்து கேலி செய்கிறோம். ஆனால் உண்மையில் "தோமா" சந்தேகப்படுபவர் அல்ல, இயேசுவை முழுமையாக நம்புகிறவர், "இலாசர்" மரித்த செய்தி இயேசுவுக்கு அறிவிக்கப்படுகிறது. இயேசுவும் தனது சீடர்களிடம் "வாருங்கள் யூதேயாவுக்குப் போவோம்" என்றழைத்தார். ஆனால் சீடர்களோ தங்களைக் கல்லெறிந்து கொல்ல நினைத்த ஊருக்குப்போக வேண்டாம் என இயேசுவைத் தடுத்தனர். ஆனால் "தோமா" மட்டுமே, வீரம் கொண்டவராய்" வாருங்கள் அவரோடு செல்வோம், அவரோடு சாவோம்" என்று சொல்லி மற்ற அனைவரையும் இயேசுவுடன் அழைத்துச் சென்றார்.

ஆபத்தைக் கண்டு அஞ்சி நின்றவர்களுக்கு நம்பிக்கையளித்து, தைரியம் சொல்லி அழைத்து வந்தவர் தோமா. அப்படிப்பட்ட தோமா ஏன் இயேசுவின் உயிர்ப்பைக் குறித்து மற்ற சீடர்கள் சொன்னதை நம்பவில்லை?

அதற்கு ஒரு காரணம் இருக்கவேண்டுமல்லவா? திருவிவிலியத்தில் இதற்கு நேரிடையான விளக்கங்கள் இல்லை? ஆனால் திருவசனங்களிலிருந்து நாம் இந்த விளக்கத்தைப் பெறமுடியும்.

இயேசுவின் உயிர்ப்பைக் குறித்து தோமாவுக்கு தெரிவித்தவர்கள் யார்? முதலாவது பேதுரு, இவர் இயேசுவைத் தெரியாது என்று மூன்று முறை மறுதலித்தவர். அப்படிப்பட்ட பேதுரு சொல்வதை தோமா ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால்தான் தோமா தானே நேரில் பார்க்க வேண்டுமென்று விரும்பினார். இயேசு தோமாவின் செயல்களைக் கண்டிக்காமல் அவரது சந்தேகத்தைத் தீர்த்து வைத்தார். எனவே நம்முடைய திருத்தூதர் "சந்தேகத் தோமா அல்ல" என்பது தெளிவாகிறது. அதுமட்டுமல்ல, இயேசுவின் விண்ணேற்பு நிகழ்வு நேரத்திலும் சிலர் இயேசுவின்மீது ஐயமுற்றதை" திருவிவிலியம் பதிவு செய்துள்ளது (மத். 28:17) இவர்கள் மத்தியில் நமது தோமாவின் செயல் சரியானதுதான்.

தோமா அவர்கள் எவ்வாறு இந்தியா வந்தார்? இக்காலத்தில் இந்தியப் பகுதிகளில் வாழ்ந்த வணிகர்களும் கிழக்காசிய நாடுகளுக்கும் கப்பல்கள்மூலம் வணிக போக்குவரத்து நடந்து வந்ததற்கு வரலாற்று சுவடுகளில் ஆதாரங்கள் உண்டு. அப்படிப்பட்டவர்களோடு இணைந்து ஒவ்வொரு வியாபாரத் தலங்களைக் கடந்து இறுதியில் அவர் இந்தியாவின் மேற்கு கடற்கரையோரம் வந்திருக்க வேண்டும். அந்த பகுதிதான் நாம் இன்று "கேரளம்" என்று அழைக்கிற பகுதி. இயேசுவின் காலத்தில் கிரேக்க மொழியானது உலகம் முழுவதும் புழக்கத்திலிருந்த அரசர் அலுவல் மொழியாக இருந்தது. எனவே கிரேக்க மொழி தெரிந்த ஒரு சிலரின் உதவியோடு மற்றவர்களிடம் பழகி அவர்களது மொழியையும் கற்றுக்கொண்டு திருப்பணிச் செய்யத் தொடங்கினார். இவ்வாறு பணி செய்ய பயணித்த தோமா அவர்கள் பல நாட்கள், பல மாதங்கள், பல ஆண்டுகள் கடின உழைப்பிற்குப் பிறகு இன்றைய கேரளத்தில் உள்ள ஏழு நகரங்களில் திருஅவையைத் தொடங்கி நடத்தினார்.

கி.பி. முதல் நூற்றாண்டில் இந்தியாவில் "ஏழை திருஅவைகள் உண்டானது என்பது சாதனைதானே. புனித பவுல் தொடங்கிவைத்த பல திருஅவைகளைக் குறித்து திருவிவிலியம் பேசுகிறது. ஆனால் தோமா அவர்களின் திருஅவைகளைக் குறித்த செய்திகள் திருவிவிலியத்தில் குறிப்பிடப்படாததால் புனித தோமாவின் சாதனைகளை பலரும் அறியவில்லை. கேரளத்தைத் தொடர்ந்து அவரது திருப்பணியின் பயணம் இன்றைக்கு நாம் வாழும் சென்னையை நோக்கி நகர்ந்தது. இங்கு வந்து அநேகருக்கு நற்செய்தி அறிவித்து மனம்மாற்றமடையச் செய்தார். அவருக்கு இங்கு சீடர்களும் உருவாயினர். அன்றைக்கு இப்பகுதியில் அரசாண்ட அரசனின் குடும்பத்தினரில் ஒரு சிலரை மனம்மாற்றினார். இதனால் கோபமுற்ற அரசன் தோமாவுக்கு மரண தண்டனை விதித்தான்.

அந்நாட்களில் புனித தோமா அவர்கள் இன்றைய சென்னையின் சைதாப்பேட்டை பகுதியிலுள்ள சின்னமலை என்று அழைக்கப்படுகின்ற பகுதியிலும் தோமையார் மலை என்று அழைக்கப்படுகின்ற பகுதியிலும் தங்கி நற்செய்தி அறிவித்து வந்தார். சின்ன மலையில் அவர் எதிரிகளின் கண்களில் படாமல் வாழ்ந்த இடத்திற்கான அடையாளங்களை இன்றும் காணமுடிகிறது. அந்த இடம் தற்போது சிறப்பான வழிபாட்டுத் தலமாக மாறியுள்ளது. அதுபோலவே தோமையார் மலையும் தோமையாரின் வாழ்வின் நிகழ்வுகளையும் நமக்கு அடையாளப்படுத்திக் காட்டுகிறது. சிலுவையில் அறையுண்ட இயேசுவை அடையாளப்படுத்தும் விதமாக தோமா அவர்களால் செய்யப்பட்டதாகக் கூறப்படும் கற்சிலைகள் இவ்விரண்டு இடங்களிலும் இன்றும் உள்ளன. தோமையார் மலையிலுள்ள அவரது கற்சிலைக்கு முன்பு செபித்துக்கொண்டிருந்தபொழுதுதான் எதிரிகள் அவரை ஈட்டியால் குத்தி கொலை செய்தனர்.

தோமாவின் சீடர்கள் அவரது திருவுடலையும் அவரைக் குத்திக் கொன்ற ஈட்டி முனையையும் சென்னை மயிலை சாந்தோம் பேராலயத்தில் அடக்கம் செய்து, அங்கு ஒரு நினைவுத் தூணையும் வைத்தனர். இன்றைய தோமையார் ஆலய அடிதளத்தைத் தோண்டியபொழுது தோமா குறித்த சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவைகளை சாந்தோம் தேவாலயத்தில் உள்ள காட்சியகத்ததில் இன்றும் காணலாம். பணிவாழ்வில் துணிவையும், சீடத்துவ வாழ்வில் உண்மையாகவும் சாட்சிய வாழ்வில் இரத்தம் சிந்தியும் சாதனையாளராக விளங்கிய புனித தோமாவைப் பின்பற்றுவோம், இயேசுவின் சாட்சிகளாக வாழ்வோம்.

## அருளாளர் மரிய ரொமேரோ மெனேசஸ் வாழ்வு தரும் பாடம்

திரு. ஜான் அலெக்ஸ்

### 12 வயதில் சலேசிய கன்னியர்கள் நடத்தும் கல்லூரியில் சேர்தல்

நிக்காரகுவா என்ற ஊரில் 1902 ஜனவரி மாதம் 13ம் நாள், வசதியுள்ள தம்பதியர்க்கு மரிய ரொமேரோ மெனேசஸ் பிறந்தார். தனது தந்தை இந்நாட்டு ஜனநாயக கட்சியில் அமைச்சராக அதிலும் இரக்கமும் தாராள மனமும் கொண்ட அமைச்சராக மக்கள் பணியாற்றுபவர். நாம் துன்பத்தில் இருந்தாலும் பிறருக்கு உதவியாக இருப்பதும் எவ்வளவு அவசியமானது என்பதை நடைமுறையில் கற்றுக் கொண்டார் ரொமேரோ. வாழ்வில் உயரிய இடத்தைப் பிடித்து செழிப்போடு வாழ எல்லா விதத்திலும் ரொமேரோவுக்கு ஊக்கமாக இருந்தார்கள் தனது குடும்பத்தினர். பியானோ, வயலின் என இசை கருவிகளை நன்கு கற்றுத் தேர்ந்தார்.

பன்னிரண்டு வயதில் சலேசிய கன்னியர்களால் நடத்தப்படும் கல்லூரியில் சேர்ந்து மகிழ்ச்சியோடு தனது பள்ளி நாட்களை அனுபவித்தார். அங்குதான் தொன் போஸ்கோவின் தனிவரம் தனக்காகவே உருவாக்கப்பட்டது போல ரொமேரோ உணர்ந்தார். "பன்னோக்கு மன்றம்"

எனப்படும் ஆரட்டரியில் தன்னை இணைத்துக்கொண்டு, இசை பயிற்சி ஆசிரியராக பணியாற்றும்போது, ரொமேரோவின் வாழ்வில் முதல் முறையாக ஏழ்மையில் வாழ்கின்ற இளம்பெண்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கின்றது.1919ல் சலேசிய கன்னியர்கள் சபையில் சேர்ந்தார். தனது நித்திய வார்த்தைப்பாட்டிற்கு பிறகு, கோஸ்டா ரிக்காவில் உள்ள சான் ஜோஸ் என்ற இடத்திற்கு அனுப்பட்டார். அதுமுதல் அவ்விடமே அவருக்கு இரண்டாவது தாய் இல்லமாகவே மாறியது.

## உடல் பொருள் ஆவி அனைத்தும் "ஏழ்மையான ஆதரவற்ற" சிறார்களையே நாடியது

வசதி படைத்த இளம் பெண்கள் பயிலும் கல்லூரியில் ஆசிரியப் பணிக்காக அனுப்பட்டார் ரொமேரோ. ஆனால், இவரோ தொன் போஸ்கோவை போன்றே "ஏழை எளிய ஆதரவற்ற" சிறார்களையே தனது வாழ்வின் இலட்சியமாக கொண்டார். ஆரட்டரி எனப்படும் பன்னோக்கு மன்றத்தில் பணியாற்ற, தனது மாணவர்களில் சிலரை தேர்ந்தெடுத்து, அவர்களை இளம் சீடர்களாக உருவாக்கி, அதற்கு 'las misioneritas" அதாவது இளம் மறைப்பணியாளர்கள் என்று பெயரிட்டு வழிநடத்தினார். இவர்களைக் கொண்டு சிறுவர் சிறுமியர்க்கு உணவு, உடை மற்றும் கல்வி பெற வசதி செய்து கொடுத்தார்.

மேலும் வறுமையில் வாழுகின்ற மக்களின் இருப்பிடங்களுக்கு சென்று, அவர்களுக்கு தேவையான வசதிகளையும், சுற்றுப்புறத்தை தூய்மைப்படுத்தி, சுகாதார உதவிகளையும், கல்வி, உணவு உடைகளையும் மற்றும் மறைக்கல்வியையும் அளித்து கவனித்து வந்தனர். இதுபோன்ற "ஏழை எளிய சிறார்களுக்கென" 36 ஆரட்டரிகளை துவங்கி பிறரன்பு பணிகளை ஊக்குவித்து செயல்படுத்தினார் மரிய ரொமேரோ. அனைத்து மக்களின் சகாய அன்னையை தனது அரசியாக ஏற்றுக்கொண்ட ரொமேரோ அந்த அன்னையின் வழியாக தனது பணிக்கு தேவையான அனைத்து உதவிகளும் பல உபகாரிகளின் மூலம் கிடைத்து வந்தது குறிப்பிடத்தக்கது. மருத்துவர்களின் தன்னார்வ தொண்டு மற்றும் உதவிகளால், மருத்துவ சிகிச்சை, மருத்துவம் சார்ந்த முன்கள பணிக்கான வசதி கொண்ட மையம், கல்வியாளர் மற்றும் மறைக்கல்வி மேம்பாட்டு கூடங்கள், செபிப்பதற்கு ஏதுவாக சிற்றாலயம் என அனைத்து வசதிகளையும் கொண்ட பன்னோக்கு மருத்துவமனையை கட்டினார் ரொமேரோ.

"சகாய அன்னையின் கோட்டை" உருவெடுக்க காரணியானவர் ஒத்த சிந்தனையுடைய கத்தோலிக்க பொதுநிலை இயக்கத்தின் "Asociación Ayuda a los Necesitados" தாராள உதவிகளால், ஏழைகளுக்கு "சகாய அன்னையின் கோட்டை" என்ற பெயரில் வீட்டுவசதி திட்டங்களை உருவாக்கி, அதன் வழியாக வறுமையின் விளிம்பில் சிக்கி வீதிகளில் தஞ்சம் புகுந்து தவிக்கும் மக்களுக்கு வீடுகளை கட்டி

கொடுத்தார். இன்றும் இப்பணி தொடர்ந்து செயல்பட்டு வருவதை நாம் பார்க்கின்றோம். சலேசிய பக்திகளின் ஒன்றான அனைத்து மக்களின் சகாய அன்னை மீதான பக்தியை பரப்ப, சான் ஜோஸ் என்னுமிடத்தில் அழகிய ஆலயத்தை எழுப்பினார். மரியன்னைமீதான தனது பக்தியின் காரணமாக, நினைத்தவைகளை நிறைவேற்றிட, அந்த அன்னையின் வழியாக கிடைத்த உபகாரிகளைக் கொண்டு பல்வேறு பிறரன்பு பணிகளை செய்ய முடிந்தது என்பதை ரொமேரோ நமக்கு நிருபித்துள்ளார். தொன் போஸ்கோவை போல, மரிய மசரெல்லோவை போல, ரொமேரோவும் திட்டமிட்டு செயல்படுவதில் வல்லவராக திகழ்ந்தார்.

இறைபக்தியின் உச்சமே, பலருக்கு ஆன்ம வழிகாட்டியாகவும், ஆற்றுப்படுத்துபவராகவும் நிலைநிறுத்தியது. இறை நம்பிக்கையில் உறுதியும், பணியில் தெளிவும், வாழ்வில் வெளிப்படையான தன்மையும் பெற்றிருந்த மரிய ரொமேரோ, சிறப்பான ஆசிரியராக, மறைக் கல்விப் பயிற்றுவிப்பாளராக, கலைஞராக, மருத்துவ உதவியாளராக, சிறார்களுக்கு நல்லதொரு தாயாக, ஏழை எளிய ஆதரவற்றவர்களுக்கு புகலிடமாக, அடைக்கலமாக வாழ்ந்தவர். இவர் 1977, ஜுலை 7ம் நாள் மாரடைப்பின் காரணமாக காலமானார். 2002ல் திருஅவையினால் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். உணவு, கல்வி, மருத்துவம், வீட்டு வசதி என ஒரு அரசாங்கம் செய்ய வேண்டிய அனைத்தையும் எந்த ஒரு தனிநபரும், இறை நம்பிக்கையும், ஒத்த கருத்துடைய நல்லுள்ளங்களின் உதவியாலும் சிறப்பாக செய்ய முடியும் என்பதற்கு மரிய ரொமேரோ ஒரு சிற்நத முன்மாதிரி என்றால் அது மிகையாகாது.

## மரியாவின் பெற்றோரை அறிவோம்

திரு. டே. ஆக்னல் ஜோஸ்

கத்தோலிக்கத் திருஅவை ஜுலை 26ந்தேதி தூய கன்னி மரியாவின் பெற்றோர்களான யோவாக்கிம் - அன்னா விழாவைக் கொண்டாடி மகிழ்கிறது. இவர்கள் மரியாவின் பெற்றோர்களாக மட்டுமின்றி, ஆண்டவர் இயேசுவின் தாத்தா பாட்டியாகவும் இருக்கின்றனர் என்பதால் பெருமை பெறுகின்றனர். இவ்வுலகைப் படைத்த கடவுளின் தாயாகும் பேறுபெற்ற மரியாவின் தாய் தந்தையாகத் திகழுமாறு இவர்கள் முன் குறிக்கப்பட்டனர் என்பது எவ்வளவு மகத்தானது. ஆகவேதான், இவர்கள் விழாவையொட்டி வரும் ஞாயிற்றுக்கிழமையை தாத்தா-பாட்டிகள் நாளாகக் கொண்டாடுமாறு திருத்தந்தை பிரான்சிஸ் அறிவித்தார்.

கன்னி மரியாவின் தந்தையான யோவாக்கிம் எருசலேமில் வாழ்ந்த ஒரு செல்வந்தர் என்று தொடக்கக் கிறிஸ்தவ மரபினால் அறிகிறோம். தாவீது குலத்தைச் சேர்ந்த இவரது வீடு பெத்சாய்தா குளத்தின் அருகில் இருந்ததாகத் தெரிகிறது. அந்த இடத்தில் தற்போது ஓர் ஆலயம் கட்டப்பட்டுள்ளது. "யோசேப்பு ஏலியின் மகன்" என்று நற்செய்தியாளர்

லூக்கா குறிப்பிடுகின்றார். மருமகன் என்ற முறையில் ஏலியின் வாரிசாக யோசேப்பு இடம் பெற்றாலும், மரியாவின் மூதாதையர் பட்டியலையே லூக்கா தருகிறார், இங்கு காணப்படும் "ஏலி" என்பது யோவாக்கிமின் மறுபெயரே என்று பல விவிலிய அறிஞர்கள் கணிக்கின்றனர்.

யோவாக்கிம் பல தொழில்களைச் செய்து செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வந்தார். ஆரோனின் (குருத்துவ) வழிமரபில் வந்த அன்னாவை இவர் திருமணம் செய்து கொண்டார். இருவரும் புனிதமாக வாழ்ந்ததுடன், கடவுளின் கட்டளைக்கும் மேலாக பத்தில் இரண்டு பங்கு வருவாயை கோயிலுக்கு காணிக்கையாகச் செலுத்தினர். இருபது ஆண்டுகள் குழந்தை இல்லாத நிலையிலும், அதை கடவுளின் விருப்பமாக ஏற்று வாழ்ந்தனர். ஆயினும், ஒருமுறை கோயிலுக்குச் சென்றிருந்த வேளையில் ரூபன் என்ற குரு, "மகப்பேறு அற்றவர் காணிக்கை செலுத்தத் தகுதியற்றவர்" என்று கூறியதால் யோவாக்கிம் வருத்தமுற்றார்.

மனமுடைந்த நிலையில் பாலைநிலத்துக்குச் சென்ற யோவாக்கிம், முதிர்ந்த வயதில் ஆபிரகாமுக்கு மகப்பேறு கிடைத்தது போன்று தமக்கும் நிகழ வேண்டுமென மன்றாடினார். அன்னாவும் தமக்கொரு குழந்தை பிறக்க வேண்டுமென வீட்டில் இருந்தவாறே உருக்கமாகச் செபித்து வந்தார். ஒரு நாள் அன்னாவுக்குத் தோன்றிய வானதூதர், இவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறக்கப் போவதாக அறிவித்தார். இச்செய்தியை அறிந்து, யோவாக்கிமும் வீடு திரும்பி அன்னாவுடன் கூடி வாழ்ந்தார். தங்களுக்குப் பிறக்கும் குழந்தையைக் கடவுளுக்கு அர்ப்பணிப்பதாக இருவரும் இணைந்து ஒரு நேர்ச்சி செய்து கொண்டனர்.

விரைவிலேயே இவர்களுக்கு கடவுளின் அருளால் தயார் செய்யப்பட்ட ஒரு பெண் குழந்தை பிறந்தாள். அவளுக்கு "மரியா" (மர்யம்) என பெயரிட்டு யோவாக்கிமும் அன்னாவும் வளர்த்து வந்தனர். மரியாவுக்கு மூன்று வயது நிறைவுற்றதும், தாங்கள் நேர்ந்து கொண்டபடி எருசலேம் கோயிலில் அவளை அர்ப்பணித்தனர். இதற்கென கோயிலை ஒட்டி அமைந்திருந்தப் பகுதியில் குருக்கள் முன்னிலையில் வளர்ந்த அவள், எபிரேய மொழி எழுத்துகள் மற்றும் மறைநூலை வாசிப்பதற்குக் கற்றுக் கொண்டாள். கோயிலுக்குத் தேவையானத் திரைச்சீலை உள்ளிட்டப் புனிதத் துணிகளை நெய்கின்றப் பயிற்சியையும் பெற்றாள்.

மரியாவைக் கோயிலில் அர்ப்பணித்து சில ஆண்டுகள் கழிந்ததும் அவளது தந்தை யோவாக்கிம் இறையடி சேர்ந்து விட்டதாக மரபுகள் கூறுகின்றன. தனிமையில் வாழ்ந்த அன்னா, வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் கோயிலுக்குச் சென்று மரியாவைச் சந்தித்து வந்தார். மரியா மறைநூல் வாக்கியங்களை மனதில் இருத்திச் சிந்தித்து ஞானத்திலும் அறிவிலும் வளர்ந்து வந்ததைக் கண்டு மெய்சிலிர்த்தார். கடவுளின் திட்டத்தால் இப்படியொரு மகள் தமக்கு கிடைத்ததை எண்ணி மிகவும்

மகிழ்ச்சி அடைந்தார். கடவுளின் பாதுகாப்பில் மகிழ்ச்சியுடன் வளர்ந்த மரியா பன்னிரு வயதை நிறைவு செய்தார்.

கோயில் விதிகளின்படி பருவ வயதை எட்டியப் பெண் குழந்தை மரியா பெற்றோரின் வீட்டிற்கு அனுப்பப்பட்டார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு மரியா தமது வீட்டிற்கு வந்தது அன்னாவுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அன்னா நெடுநாள் தனிமைக்குப் பிறகு, இரண்டு ஆண்டுகள் மரியாவின் அன்பில் நனைந்தவராக வாழ்வைச் செலவிட்டார். மரியாவுக்கு பதினான்கு வயதானபோது, தமது உறவினரான குரு செக்கரியா வழியாக ஒரு மருமகனைத் தேர்ந்தெடுக்க அன்னா விரும்பினார். அவரது ஏற்பாட்டின் பேரில், அன்னா தாவீது குலத்தைச் சேர்ந்த யோசேப்புடன் மரியாவுக்கு திருமண ஒப்பந்தம் செய்து வைத்தார்.

இந்நிலையில் திருமணத்திற்கு முன்பே, மரியா கருவுற்றச் செய்தியை அறிந்து அன்னா வேதனை அடைந்தார். தூய ஆவியால் கருவுற்றதாக மகள் கூறியதை அன்னா நம்பினாலும், இந்த உலகிற்கு என்ன பதில் சொல்வது என்று அறியாமல் திகைத்து நின்றார். ஆயினும், இந்த நெருக்கடியில் கடவுளே குறுக்கிட்டு உதவ வேண்டுமென அன்னா மனதுருகி வேண்டிக் கொண்டார். யோசேப்பும் கடவுளின் திட்டத்தை அறிந்து மரியாவை ஏற்றுக் கொண்டதால், அன்னா நிம்மதி பெருமூச்சு விட்டார். யோசேப்பும் மரியாவும் மகிழ்ச்சியாக வாழ்ந்ததைக் கண்டதால், அன்னாவும் தமது வாழ்நாள்களை மகிழ்ச்சியாகச் செலவிட்டார்.

மரியாவுக்குப் பேறுகாலம் நெருங்கிய வேளையில், அன்னா தமது பேரக்குழந்தையைக் காணப் பெரிதும் ஆவல் கொண்டிருந்தார். பெத்லகேமில் பிறந்த பாலன் இயேசு எருசலேம் கோயிலில் அர்ப்பணிக்கப்பட்ட வேளையில் உலக மீட்பரைக் கண்ட அன்னா மிக மகிழ்ந்தார். தமது மகளின் கருப்பையில் இருந்து மெசியா பிறந்துள்ளார் என்பதை அறிந்ததும் கடவுளின் முன்பாகப் பணிந்து நன்றி செலுத்தினார். ஏரோதின் சூழ்ச்சிக்குப் தப்பியோடியத் திருக்குடும்பம் எகிப்தில் தங்கி வாழ்ந்த நாள்களில் அன்னா கவலையுற்றார். தமது மகளின் குடும்பத்தார் நலனுக்காகவும் பாதுகாப்புக்காகவும் இவர் இடைவிடாது மன்றாடி வந்தார்.

திருக்குடும்பம் நாசரேத்துக்குத் திரும்பி வந்து புதிய வாழ்வைத் தொடங்கிய நாள்கள் முதல் அன்னா அவர்களோடு ஒரே வீட்டில் வாழ்ந்தார். தமது மகள் மரியா குடும்பத்திற்குத் தேவையான சிறுசிறு உதவிகளை அன்னா செய்து வந்தார். தமது பேரன் இயேசுவோடு ஒரு பாட்டிக்குரிய பாசத்துடன் பல கதைகள் சொல்லி விளையாடி மகிழ்ந்தார். இயேசுவுக்கு எட்டு வயதான வேளையில் அன்னா இறையடி சேர்ந்தார் என்று அறிகிறோம். புனித யோவாக்கிம், புனித அன்னா வழியாக நமது பெற்றோர்களின் நலனுக்காக மன்றாடுவோம். நமது தாத்தா பாட்டிகளின் அன்பையும் அக்கறையையும் கொண்டாடி மகிழ்ந்திடுவோம்.

# திருஅவைச் செய்திகள்

திரு. சாண்டோ

## கடவுளின் வழிகளை நம்புபவர்களாக பொறுமைக் காப்போம்

கடவுளின் வழிகளையும் அவர் வகுத்த நேரத்தையும் நம்புபவர்களாக நாம் பொறுமை காப்போம் என டுவிட்டர் செய்தியொன்றை வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். நாம் கவலைகளிலும் ஊக்கமிழத்தல்களிலும் நம்மை இழந்துவிடாமல், நம் பாதையை மீண்டும் கண்டுகொண்டு, நம் கனவுகளுக்கு புத்துயிரூட்ட உதவும் வண்ணம் இறைவன் தன் வாக்குறுதிகளுக்கு எப்போதும் பிரமாணிக்கமாக இருக்கிறார் என்பதை நினைவில் கொள்வோம் என தன் டுவிட்டர் செய்தியில் மேலும் கூறியுள்ளார் திருத்தந்தை. கடவுளின் வழிகளிலும் நேரத்திலும் நம்பிக்கைக் கொண்டு பொறுமை காக்கும் நாம், துயரிலும் ஊக்கமிழப்பிலும் சோர்ந்துவிடாதபடிக்கு நம் பாதைகளையும் கனவுகளையும் உயிரூட்ட இறைவன் தன் வாக்குறுதிகளை நிறைவேற்றுவார் என்பதை நினைவில் கொள்வோம் என திருத்தந்தை டுவிட்டர் செய்தி உரைக்கிறது.

## 2. பெருவெள்ளத்தால் 7,72,000 பங்களாதேஷ் குழந்தைகள் பாதிப்பு

பங்களாதேஷ் நாட்டின் வடகிழக்குப் பகுதியின் பெருவெள்ளத்தால் 7இலட்சத்து 72ஆயிரம் குழந்தைகள் உட்பட 20 இலட்சம் மக்கள் பாதிக்கப் பட்டுள்ளதாக யுனிசெப் என்னும் ஐ.நா.வின் குழந்தைகளுக்கான அவசர கால நிதியமைப்பு அறிவித்துள்ளது. தண்ணீர் மட்டம் உயர்ந்துவரும் நிலையில், நீரில் மூழ்குதல், சத்துணவின்மை போன்றவைகளால் உயிரிழப்பு, நீர் தொடர்புடைய தொற்றுநோய்களுக்கு உள்ளாதல், இடம்பெயரும் துயரங்கள், முகாம்களில் தவறாக நடத்தப்படல் போன்றவைகளுக்கு குழந்தைகள் உள்ளதாக யுனிசெப்பின் அறிக்கைத் தெரிவிக்கிறது. பங்களாதேஷ் அரசின் ஒத்துழைப்புடன் 5 நாட்களுக்கு மேலாக ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு நீர் விநியோகத்தை மேற்கொண்டு வருவதாகவும், மேலும் தேவையான அவசர உதவிகளை வழங்க முயற்சிகளை மேற்கொள்வதாகவும் கூறுகிறது

## 3. சிங்கப்பூர் அரசுத் தலைவர் திருத்தந்தையுடன் சந்திப்பு

யாழ்ப்பாண தமிழ் வம்சாவழியைச் சேர்ந்த சண்முகரத்னம் அவர்கள், சிங்கப்பூரின் ஒன்பதாவது அரசுத் தலைவராக கடந்த ஆண்டு, அதாவது 2023ஆம் ஆண்டு செப்டம்பர் 14லிருந்து பதவி வகித்து வருகிறார் சிங்கப்பூர் நாட்டின் புதிய அரசுத் தலைவர் தர்மன் சண்முகரத்னம் அவர்கள் ஜூன் 22, சனிக்கிழமையன்று திருத்தந்தையை திருப்பீடத்தில் சந்தித்து உரையாடினார். தன் உயர்மட்ட அதிகாரிகள் குழுவோடு வத்திக்கான் வந்திருந்த சிங்கப்பூர் அதிபர் சண்முகரத்னம் அவர்கள், திருத்தந்தையைச் சந்தித்தபின் திருப்பீடச் செயலகம் மற்றும்

திருப்பீட வெளியுறவுத் துறையின் உயர்மட்ட அதிகாரிகளையும் சந்தித்து உரையாடினார். சிங்கப்பூரில் திருஅவையின் பணி, சமூகத்தில் அதன் இடம், மற்றும் இடம்பெறவிருக்கும் திருத்தந்தையின் திருப்பயணம் போன்றவை குறித்தும் விவாதிக்கப்பட்டன.

## 4. அண்டவியல் குறித்த ஆராய்ச்சியை திருஅவையும் ஊக்குவிக்கிறது!

தனது உரையில், அண்டவியல், அதில் திருஅவைக் காட்டும் ஆர்வம், பேராயர் George Lemaître அவர்களின் அண்டவியல் குறித்த அவரது அறிவியல் திறன் ஆகியவற்றைக் குறித்த சிந்தனைகளை வழங்கியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். இந்த நாட்களில் நீங்கள் அண்டவியலில் அறிவியல் ஆராய்ச்சி எழுப்பும் அண்மைய கேள்விகளைப் பற்றி விவாதிக்கிறீர்கள், அதாவது, ஹப்பிள் (Hubble) மாறிலியின் அளவீட்டில் பெறப்பட்ட வெவ்வேறு முடிவுகள், அண்டவியல் ஒருமைப்பாடுகளின் புதிரான தன்மை (பெருவெடிப்பு முதல் கருந்துளைகள் வரை), புவியீர்ப்பு அலைகளின் மேற்பூச்சு பொருள் குறித்தெல்லாம் கலந்துரையாடுகிறீர்கள் என்றும் கூறினார் திருத்தந்தை.

திருஅவையும் இத்தகைய ஆராய்ச்சிகளில் கவனம் செலுத்துகிறது மற்றும் அதை ஊக்குவிக்கிறது, ஏனெனில் இது நம் காலத்தின் ஆண்கள் மற்றும் பெண்களின் உணர்திறன் மற்றும் அறிவுத்திறன்களில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்றும் உரைத்தார் திருத்தந்தை. இது திருப்பாடல் ஆசிரியர் (காண்க திபா. 8:4-7) கூறும் வார்த்தைகளுடன் மிகவும் பொருந்திப்போகின்றது என்று எடுத்துக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்தக் கருப்பொருள்கள் இறையியல், தத்துவம், அறிவியல் மற்றும் ஆன்மிக வாழ்க்கைக்கு எவ்வாறு சிறப்புப் பொருத்தம் கொண்டவையாக இருக்கின்றன என்பதும் தெளிவாகிறது என்றும் சுட்டிக் காட்டினார்.

## 5. அல்பேனிய அருள்பணியாளர்கள் இருவர் அருளாளர் நிலைக்கு உயர்வு!

**அருள்பணியாளர் Luigi Paliq OFM** அல்பேனிய நாட்டைச் சேர்ந்த ஃபிரான்சிஸ்கன் சபையின் அருள்பணியாளர் Luigi Paliq அவர்கள், உள்ளூர் மக்களை துன்புறுத்தியதை எதிர்த்ததற்காகவும், மரபுவழிக்கு (orthodoxy) கட்டாய மதமாற்ற முயற்சிகளுக்காகவும் 1913-இல் Montenegrin படையினரால் கைது செய்யப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, கொலை செய்யப்பட்டார்.

**அருள்பணியாளர் Gjon Gazulli** அருள்பணியாளர் Gjon Gazulli அவர்கள், பொய்யான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 1927-ஆம் ஆண்டு, கொல்லப்பட்டார். மக்களிடையே கட்டாய மத ஒற்றுமைக்கான (forceable religious unity) அரசின் முயற்சிகளுக்கு அவரது செயல்பாடுகள் தடையாக இருந்ததால் அவர்மீது பொய் வழக்கு போடப்பட்டு தூக்கிலிடப்பட்டார். இவரும் அல்பேனிய நாட்டைச் சேர்ந்தவர்.

## சுடர் வாசகர் போட்டி - 111 சரியான விடைகள்

1. நோய்வாய்ப்பட்டிருந்து போது அக்கறையும் நெருக்கமும் காட்டியதற்காக
2. எட்வர்ட் கிளினிக் (23) ஜரோக்னிவ் (20) செஸ்லாவ் ஜோஸ்வியாக் (21) எட்வட் காஸ்மிரிஸ்கி (22)
3. சால்வின் என்னும் இடத்தில் தலைவெட்டப்பட்டு
4. புனித திருமுழுக்கு யோவான்
5. புனித அலோசியஸ் கொன்சாகா
6. ஜோசப்
7. புனித போனிபாஸ் ஆயர்
8. புனித ஜஸ்டின்
9. செவிலியர் தினம்
10. திருமுழுக்கு யோவான்
11. இயேசு, பேதுருவிடம் கூறியது
12. "கோணலான இரும்புக் கம்பி நான் அதை சரிப்படுத்தவே"
13. சைபரஸ் தீவில், கல்லால் எறியப்பட்டு இறந்தார்
14. எபேசியர் 3:17
15. "உணவு வீடு"

### குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

Mrs. Pauline Susainathan, Madhuranthagam

Sr. Melchior, Coimbture

Sr. Ferrera, Salem

## சுடர் வாசகர் போட்டி - 112

1. அல்பேனியாவைச் சார்ந்த எந்த இருவருக்கு அருளாளர் பட்டம் வழங்கப்பட்டது?
2. ஏழை எளிய சிறார்களுக்கு 36 ஆரட்ரிகளை துவங்கியவர் யார்?
3. 13வது குழந்தையாகப் பிறந்து சிறந்த புனிதராக வாழ்ந்த புனிதர் யார்?
4. புனித அன்னாவுக்கு 550ம் ஆண்டு யாரால் பேராலயம் கட்டப்பட்டது?
5. "இறைவனின் சேவகன்" இது யாருடைய பட்டப்பெயர்?
6. கார்மேல் அன்னை கையில் இருந்த அங்கி என்னவாக மாறியது?
7. புனித அந்தோனி மரிய சக்கரியா எங்கு எப்போது டாக்டர் பட்டம் பெற்றார்?
8. "நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்" திருவிவிலியத்தில் எங்குள்ளது?
9. "சகாய அன்னையின் கோட்டை" என்றால் என்ன?
10. புனித தோமாவின் கையில் உள்ள கற்சிலுவை யாரால் செய்யப்பட்டது?
11. இயேசுவை எந்தெந்த பெயர்களால் மார்த்தா அறிக்கையிட்டார்?
12. "திருப்பயணிகளின் பாதுகாவலர்" யார்?
13. புனித ஷார்பல் மாக்லுபின் பெற்றோர் யார்?
14. கார்மேல் மலைக்கு எபிரேய மொழியில் என்ன அர்த்தம்?
15. கட்டிடம் கட்டுவோர் கண் பார்வையற்றோரின் பாதுகாவலர் யார்?


## தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ.100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

தீபகம்
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைப்பேசி: 044 - 26428162.

பெயர்: ..................................
முகவரி: ..................................
..................................
..................................
..................................

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

அருளாளர் அகஸ்துஸ் சர்தோரிஸ்கி
பொதுக்காலம் 18ம் ஞாயிறு
புனித மரியாவின் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு (பனிமய அன்னை)
ஆண்டவரின் தோற்ற மாற்றம் பெருவிழா
புனித தோமினிக்
பொதுக்காலம் 19ம் ஞாயிறு
புனித மாக்சிமிலியன் மரிய கோல்பே
புனித கன்னி மரியாவின் விண்ணேற்பு பெருவிழா
பொதுக்காலம் 20ம் ஞாயிறு
அரசியான புனித கன்னி மரியா
புனித பர்த்தலமேயு திருத்தூதர்
பொதுக்காலம் 21ம் ஞாயிறு
அருளாளர் செப்ரீனோ நமங்குரா
புனித அகுஸ்தின்
புனித திருமுழுக்கு யோவானின் பாடுகள்

### பகுதி 2: நம்பிக்கையில் வளர...

விண்ணுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட மரியா ஓர் அரசி
புனித மாக்சிமிலியன் மரிய கோல்பே - வாழ்வு தரும் பாடம்
அருளாளர் அகஸ்துஸ் சர்தோரிஸ்கி மற்றும் அரு. செப்ரீனா நமங்குரா வாழ்வை அறிவோம்
திருஅவைச் செய்திகள்

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை ஜூலை 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்.
(சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

# ஜூலை மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | தி | | ஆமோ. 2: 6-10, 13-16 | மத். 8: 18-22 |
| 2 | செ | | ஆமோ. 3: 1-8, 4:11-12 | மத். 8: 23-27 |
| 3 | பு | **புனித தோமா இந்தியாவின் திருத்தூதர் பெருவிழா** | எபே. 2: 19-22 | யோவா. 20: 24-29 |
| 4 | வி | போர்த்துக்கல் நாட்டு புனித எலிசபெத் | ஆமோ. 7: 10-17 | மத். 9: 1-8 |
| 5 | வெ | புனித அந்தோணி மரிய சக்கரியா | ஆமோ. 8: 4-6, 9-12 | மத். 9: 9-13 |
| 6 | ச | புனித மரிய கொரற்றி | ஆமோ. 9: 11-15 | மத். 9: 14-17 |
| 7 | **ஞா** | **பொதுக்காலம் 14ம் ஞாயிறு** | **I.** எசே. 2: 2-5<br>**II.** 2கொரி. 12: 7-10 | மாற்கு 6: 1-6 |
| 8 | தி | | ஓசே. 2: 14-16, 19-20 | மத். 9: 18-26 |
| 9 | செ | புனித அகுஸ்தின் சவோரோங் | ஓசே. 8: 4-7, 11-13 | மத். 9: 32-38 |
| 10 | பு | | ஓசே. 10: 1-3,7-8,12 | மத். 10: 1-7 |
| 11 | வி | புனித பெனடிக்ட் | ஓசே. 11: 1-4, 8-9 | மத். 10: 7-15 |
| 12 | வெ | | ஓசே. 14: 2-10 | மத் 10: 16-23 |
| 13 | ச | புனித ஹென்றி | எசா. 6: 1-8 | மத். 10: 24-33 |
| 14 | **ஞா** | **பொதுக்காலம் 15ம் ஞாயிறு** | **I.** ஆமோ. 7: 12-15<br>**II.** எபே. 1: 3-14 | மாற்கு 6: 7-13 |
| 15 | தி | புனித பொனவெந்தூர் | எசா. 1: 10-17 | மத். 10: 34-11:1 |
| 16 | செ | கார்மேல் மலை புனித கன்னி மரியா | எசா. 7: 1-9 | மத். 11: 20-24 |
| 17 | பு | | எசா. 10: 5-7, 13-16 | மத். 11: 25-27 |
| 18 | வி | | எசா. 26:7-9,12,16-19 | மத். 11: 28-30 |
| 19 | வெ | | எசா. 38: 1-6, 21-22,7-8 | மத். 12: 1-8 |
| 20 | ச | புனித அப்போலினாரியஸ் | மீக். 2: 1-5 | மத். 12: 14-21 |
| 21 | **ஞா** | **பொதுக்காலம் 16ம் ஞாயிறு** | **I.** எரே. 23: 1-6<br>**II.** எபே. 2: 13-18 | மாற்கு 6: 30-34 |
| 22 | தி | புனித மகதலா மரியா | இபா. 3: 1-4 | யோவா. 20: 1, 11-18 |
| 23 | செ | புனித பிரிட்ஜித் | மீக். 7: 14-15, 18-20 | மத். 12: 46-50 |
| 24 | பு | புனித ஷார்பல் மாக்லுப் | எரே. 1:1, 4-10 | மத். 13: 1-9 |
| 25 | வி | புனித யாக்கோபு திருத்தூதர் விழா | 2கொரி. 4: 7-15 | மத். 20: 20-28 |
| 26 | வெ | புனிதர்கள் சுவக்கின் அன்னா புனித கன்னி மரியாவின் பெற்றோர் நினைவு | எரே. 3: 14-17 | மத். 13: 18-23 |
| 27 | ச | | எரே. 7: 1-11 | மத். 13: 24-30 |
| 28 | **ஞா** | **பொதுக்காலம் 17ம் ஞாயிறு** | **I.** 2அர. 4: 42-44<br>**II.** எபே. 4: 1-6 | யோவா. 6: 1-15 |
| 29 | தி | புனிதர்கள் மார்த்தா, மரியா, லாசர் | 1யோவா. 4: 7-16 | லூக். 10: 38-42 |
| 30 | செ | புனித பீட்டர் கிறிசோலோகுஸ் | எரே. 14: 17-22 | மத். 13: 36-43 |
| 31 | பு | லெயோலா நகர்ப் புனித இஞ்ஞாசியார் | எரே. 15: 10.16-21 | மத். 13: 44-46 |

# தீபகம்

தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்

வழங்கும்

## சிறார்களின் திருவிருந்துக்கான மறைக்கல்வி

Catechism for First Holy Communion




இப்போது விற்பனையில்




## சிறார்களின் உறுதிப்பூசுதலுக்கான மறைக்கல்வி

Catechism for Sacrament of Confirmation

## ஞாயிறு மறைக்கல்வி பாடநூல்கள்


Sunday Catechism Textbooks




(Cycle A, B and C)
(Available in Tamil and English)

| வகுப்புகள் | For Classes : |
|---|---|
| 1 முதல் 3 வரை | 1 - 3 |
| 4 முதல் 6 வரை | 4 - 6 |
| 7 முதல் 9 வரை | 7 - 9 |
| 10 முதல் 12 வரை | 10 - 12 |

+91 9385201453 Deepagam Don Bosco




அன்பு நண்பர்களே, **தீபகம்** மேற்கொள்ளும் அனைத்து இறைப்பணிக்காகவும் உங்கள் தாராள நன்கொடைகளை இந்த QR கோடை ஸ்கேன் செய்து இதன் மூலம் அனுப்பி வைக்க அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.
இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

013805300000761 2@SIBL0000138
SISS A/C DEEPAGAM
THE CITADEL, 45, Landons Road
Kilpauk, Chennai - 600010

www.upiqrcode.com

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
**தீபகம்**, 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
+91 9385201453 **Deepagam Don Bosco**


தயாரிப்பு : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)
கணினியேற்றம் : **கபிரியேல் மேரி** அட்டைப்பட வடிவமைப்பு : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT
தயாரிப்பில் மேற்பார்வை : **சாண்டோ, ஈசாக்** அச்சிட்டோர் : **சிகா அச்சகம்,** கீழ்ப்பாக்கம், சென்னை - 10